# தீராஉலா 2.0



---ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா




#தீராஉலா 2.0 : ஆரம்பம் 001 :  December 3rd 2018

Three Idiots :

Ragu G
Rathinavelu Muthusubramanian
And
Myself

---

தீரா உலா 001 - ஏற்படுத்திய அதிர்வுகள் இன்னும் இருக்கின்றன.
ஆனாலும் 002 ஆரம்பம்.

சில கேள்விகளும், பதில்களும் :

01: ஏன் பயணிக்க வேண்டும் ?

ஏன் கூடாது ?

02 : என்ன special இந்த பயணத்தில் ?

எந்த plan ம் இல்லை.

03 : யார் யார் ?

மேலே உள்ள மூன்று idiots.

04 : எங்கே ?

தெரியாது. திட்டம் இலா பயணத்தில், எங்கே என்பது செல்லும் வழியில் தீர்மானமாகும்.

05 : உணவு ?

Diet Drive கேள்விப்பட்டதுண்டா ?
Update செய்கிறோம். அந்தந்த மாநிலங்களில் சிறப்பு உணவுகளை சுவைத்தாலும், Diet இல் கவனமாய் ஒரு Drive.

06 : தங்குதல் / தூக்கம் ?

Who Knows ?

07 : எந்த vehicle ?

Honda City

08 : பதிவுகளை தொடர்ச்சியாக பார்க்க வேண்டும் எனில் .. ?

@தீராஉலா வை கவனிக்கவும்.

09 : பாடல்கள் ?

ராஜா ராஜா தான்.

10 : ஒரு caption ஒன்று ?

நான்கு மாநிலங்கள். மூன்று idiots. இரண்டாம் பயணம். ஒரே rule - ஆம் - " No rule is the rule "

11. அடுத்த முறை கலந்து கொள்ள என்ன செய்ய வேண்டும் ?

பெயர் பதிவு இங்கே செய்யவும். முடிந்தால் ஒரு short drive க்கு தயாராவோம்.

NLP Practitioners க்கு ஒரு குழு என்னுடன் டெல்லியில் இருந்து இமயமலைக்கு பயணிக்க தயாராகிறது. ஆம். Travel இல் கற்றல்.

எங்கே செல்ல விரும்புகிறீர்கள் என்று பதிவு செய்யுங்கள். திட்ட வரைவை உங்களிடம் கொடுக்கிறேன். செல்வோம்.

12. உடன் பயணிபவர்களை எப்படி select செய்கிறீர்கள் ?

இயற்கை செய்கிறது. நாம் அனைவரும் medium.


சாலைகள் காத்திருக்கின்றன - மனங்களுக்காக.
NH 4
316
529
Shot on OnePlus
By soul of a wanderer


Shot on OnePlus
By soul of a wanderer


74%
06:15
Sutagatti
19°
Sunny 28 / 18°C
AccuWeather

#தீராஉலா 2.0 : 002


பயணங்கள் நம்மை கவர்வதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. ஒரு பயணம் ... மனிதர்கள், கலாச்சாரம், உணவு, உடை, இருப்பிடம் .. எல்லாவற்றையும் மாற்றிவிட்டு, நம்மை " என்ன " என்று கேள்வி கேட்கும்.

Ragu G - க்கு driving மிக பிடிக்கிறது. முத்துவுடன் சேர்ந்து 12 மணி நேரத்தில் 800 Kilometer கடந்திருக்கிறார். இன்னும் energy source active ஆக இருக்கிறது அவரிடம். சிரித்த முகம் curious ஆக எதையோ தேடுகிறது. தேடல் தொடரும்.

காலை சூரிய உதயம் வாகன கண்ணாடியில் பிரதிபலிப்பது ஒரு பெரும் பலம். சாலை கரும்பாம்பாக நீள, சூரியன் மஞ்சள் பூவாக வானில் மலர, யாரோ அள்ளி எறிந்த மேகங்கள் ஜொலிக்க .. .. என்ன ஒரு காட்சி !!

அதிகாலையில் 19 degrees என்று temp. குளிர் சொல்ல, தன் கையால் தன் உடலை கட்டி நிற்கும் மனிதர்களின் ஸ்நேக சிரிப்பினில் இருக்கிறது வாழ்க்கையின் இனிய பக்கங்களின் பயணம்.

கொஞ்சம் வெளியே வருவோம். வெறும் பண சம்பாதிப்பு மட்டும் வாழ்க்கை அல்ல !




@தீரா உலா 2.0 : 003 :

Ghodbunder : Maharashtra Border :

24 மணி நேரத்திற்கு முன் சென்னையில். இப்போது மும்பை அகமதாபாத் எல்லையில் ! ஆம். 1300 kilometers பயணம். Non Stop. தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா, குஜராத் என்று 24 மணி நேரத்தில் 4 மாநிலங்கள். 4 மாநில நதிகள், சாலைகள், மக்கள், கலாச்சாரம், மொழி, உணவு வகை .. 24 மணி நேரம் இப்படி மாற்றம் கொடுக்க முடியும் எனில் அது இந்தியாவில் மட்டுமே முடியும் !


சூரியனை சாட்சியாக வைத்துக்கொண்டு மணல் எடுக்கப்படுவதை இந்த புகைப்படத்தில் காணலாம். இயற்கை வளம் மனிதனால் மட்டுமே திருடப்படும். கெடுக்கப்படும். நான்கு மாநிலங்களிலும் இது நடக்கிறது. ஆற்றங்கரையில் வாழ்ந்த வரை மணலை அப்படியே விட்டுவிட்டு ஆற்றை வளமையாக வைத்த நாம்.. நகர ஆரம்பித்த போது ஆறு தான் நம் முதல் இலக்கானது !

ஆறுகளின் மௌனம் விவரிக்க முடியாதது. அனைத்து செயற்கை எந்திரங்களும் ஆற்றை அடித்து துவைக்கும்போதும், மன்னித்து சிறிது சுழித்து சிரித்து நகரும் ஆறு போல ஒரு ஞானி இருக்க முடியுமா என்ன ?

மணல் அற்ற ஆறுகளும் எதிர்காலத்தில் வரும். அது நம் சுய நலத்தின் எடுத்துக்காட்டு.

நான்காம் மாநிலம் இன்னும் நிறைய கற்றுத்தரும் என்கிற நம்பிக்கையில் பயணம் தொடர்கிறது.









@தீராஉலா 2.0 : 004 :

நர்மதாவின் பிள்ளைகள் :

ஆக .. குஜராத்தில் #slogging ஆரம்பித்தாயிற்று. நர்மதை ஆற்றின் பாலம் என்னை கவர்ந்த பாலங்களில் ஒன்று. இந்த பாலத்தின் கட்டமைப்பு

மிகவும் வித்தியாசமான ஒன்று. இங்கே slogging என் நீண்ட நாள் கனவு.இன்று Ragu G Rathinavelu Muthusubramanian அவர்களுடன் இணைந்து ஒரு அழகான ஓட்டம்.

மெத்தோட்டம் தொடர்கையில் ஒரு அழைப்பு. சங்கர வள்ளி நாயகம்- என்கிற ஆளுமை - ஆரோக்யம் நல்வாழ்வு மற்றும் 10K வில் தன் பங்கை சிறப்பாக செய்பவர். Neander Selvan க்கு நன்றி தெரிவித்து தன் பேச்சை ஆரம்பிக்கிறார். 105 இல் இருந்து 82 ஆக மாறிய கதைகளை சொல்கிறார். ஆர்வமுடன் கேட்டுக்கொண்டோம்.

நர்மதா நதியின் பாலத்தில் சில புகைப்படங்களை எடுத்தேன். Ananthi Ragupathy, Jameel Rizwana Hussain மேடம் க்கு மிகவும் பிடிக்கக்கூடும். அந்த பிரம்மாண்ட விளக்கொளியில் இரு புள்ளிகளாய் 10K ஆளுமைகள் நகர, தூரத்தில் இருந்து படம் எடுத்த எனக்கு பெரு மகிழ்வு.

இந்த பாலம் தாண்டியவுடன் அடுத்த கட்டிடத்திலேயே " Bhuvit's Fun & Food village " என்கிற Food Joint இருக்கிறது. இரவு 01.53 என்ற பாகுபாடெல்லாம் இல்லை. மக்கள் தேவையானதை order செய்து உண்ண ஆரம்பிக்கின்றனர். ஒரு இளைஞர் கூட்டம் ஏதோ ஒரு பாட்டுக்கு ஆடிக்கொண்டு இருந்தது.

இந்த பாலம் முதலில் மிகவும் சிதிலம் அடைந்த நிலையில், traffic இங்கு ஒரு பிரச்சினையாக இருந்தது. இதை தவிர்க்க நான் வேறு ஒரு வழி எடுப்பது உண்டு. அங்கே ஆங்கிலேயர் கட்டிய Golden Bridge ஐயும் கண்டு மலைத்ததுண்டு. இந்த பாலம் கட்டியவுடன் இப்போது அந்த பக்கம் செல்வதில்லை. சில விடயங்களும் நம்மிடம் தற்காலிகமாக மட்டுமே வாழும்போல !

குஜராத்தின் தேநீர் சுவை coffee யை மறக்கடிக்க செய்யும். மூன்று idiots களும் தேனீர் சுவைக்க - வந்தது என்னவோ மண் குவளையில் ! தேனீர் நன்றாகவே இருந்தது.




@தீரா உலா 2.0 : 005 :

உணவு பேசும் குஜராத் :

பொதுவாக குஜராத்திகள் உணவை ரசித்து உண்பவர்கள். அனைத்து சுவையும் நிரம்பும் உணவு அவர்களுடையது.

1. ஜெலேபியும், பாபடா வும் சூடாக சாப்பிட்டதுண்டா நீங்கள் ?

2. தபேலி - bread க்குள், cheese, Groundnut, Onion .. இன்னும் ஏதோ powders .. கொஞ்சம் கார சட்னி .. என்ன நாக்கு ஊறுகிறதா ?

3. Cheese Vadapav - இரண்டு Bread .. நடுவில் தேங்காய் துருவல் Cheese .. கொஞ்சமா மிளகாய், கொஞ்சமாய் கார சட்னி . அவ்வளவே. வ்வ்வ்... எச்சில் ஒழுகும்.

4. டோக்ளா என்பது ஒரு செவ்வக இட்லி என்று சொல்லலாம்.

5. அவ்வளவிற்கும் பிறகு கொஞ்சமா குஜராத்தி டீ ...

என்ன Carbo கணக்கெல்லாம் போட்டு பார்த்தா ஓட தோணுதா ? ஆம். Carbo கணக்கு போட்டால் சாப்பிடவே முடியாது தான். அதே சமயம் ...

" அந்தந்த ஊருக்கு வந்தால், அங்கு கிடைப்பதை சாப்பிட்டு .. முழுமையாக வாழ். அங்கே அதன் பகுதியாக மாறிவிடு. அந்த மண்ணும் ... அந்த மனிதர்களும், உன்னை புரிந்து கொள்ளட்டும். அங்கே சாதாரண மனிதர்களின் உணவு உனக்கு வழிகாட்டும். Air conditioned உணவு விடுதிகள் யதார்த்தத்தை அந்நியப்படுத்தும். சாதாரணர்களோடு பழகு. உணவு உண். சிரி. யதார்த்த வாழ்வை அவர்கள் எதிர்கொள்வதை ருசி. பயணம் இனிது ஆகும். "

என்று நான் ஒருமுறை பேசியது ஞாபகம் வருகிறது !

யோசிப்போம்.





#தீராஉலா2point0 : 006 ;

ஒவ்வொரு முறையும் சபர்மதி என்னை வசீகரிக்கும். Kirthika Tharan சொன்னது ஒலை Minimalism ஆரம்பித்து வைத்த ஒரு தலைவன் இங்கு தந்தையாக பெயர் பெற்று உறங்குகிறார்.

" காந்தி கோட்டை கழட்டியதற்கும், அம்பேத்கார் கோட்டை மாட்டியதற்கும் " .. என்று நாம் பேசிக்கொண்டே கடக்கலாம். ஆனால் அந்த மனிதன் போட்ட நற் சுழிகளில் இன்னும் நம் எதிர்காலம் மிளிர்ந்து கொண்டே இருக்கிறது.

" My Life is my message " என்று உரக்க சொல்லமுடிந்த excellence அவர். யாரையும் கிண்டல் செய்யும் இந்த தலைமுறை அவரையும் விட்டுவைக்கவில்லை. ஒருமுறை whatsappஇல் அவர் யாரோ ஒரு பெண்ணுடன் ஆடிக்கொண்டு இருப்பது போல புகைப்படம் வந்தது. அதில் அவர் பெண்கள் விஷயத்தில் சரியில்லை என்று ஒரு article வேறு. எனக்கு MR ராதா அவர்கள் சொன்னது ஞாபகத்தில்.

" இருக்கிற சில முன்னே நிற்கும் மனிதர்களையும் கிண்டல் செய்து, கேள்வி கேட்டு, சந்தேகப்பட்டு பின்னே தள்ளி விடுங்கள். பின் .. யாருமே இல்லையே என்று புலம்புங்கள். மனுஷனை / உங்களை எல்லாம் திருத்தவே முடியாது "

Ragu G சுத்தமாக அமைதியாகி விட்டார். Rathinavelu Muthusubramanian தியானம் பழக ... இந்த இடம் சுத்தமாய் அமைதியாய் நிற்கிறது. எனக்கு பழைய நினைவுகள் !


நினைவு ஒன்று :

அந்த பெண் பெயர் மேரி. அமெரிக்காவில் இருந்து வந்திருந்தாள். இங்கே சபார்மதியில் குழந்தைகளுக்கு ( ஹரிஜன ) ஆங்கில பாடம் நடத்தினாள். அவளை கொஞ்ச நேரம் கவனித்து பின் சொன்னேன் .. " நீங்கள் விரும்பினால் நான் அவர்களுக்கு பாடம் சொல்கிறேன் ". ஆசிரமத்தில் அனுமதி பெற்று yes என சிரித்த போது NLP வகுப்புகளை அந்த ஹரிஜன குழந்தைகளுக்கு நடத்தினேன். 2000 ஆம் வருட நிகழ்வு அது. என் Trainer வாழ்வின் மிகச் சிறந்த தருணங்களில் அதுவும் ஒன்று !

நினைவு இரண்டு :

Counselling ஒன்றுக்கு வந்த பெண்ணும் நானும் இங்கு வந்து பேச ஆரம்பித்தோம். கதை ஒன்றை சொல்லிவிட்டு " ஒரு visit செய்து பின் பேசுவோம் "என்று சொன்னேன். Visit செய்தபின் சொன்னாள் .. " கதை இப்போது புரிகிறது. மிகவும் அலட்டிக்கொள்கிறேன். சாதாரணமாக வாழலாம் "

சபர்மதி என் தொடர் வாழ்வின் ஒரு அங்கம் !




#தீராஉலா2point0: 007

உப்பு கலந்த காய்ந்த செம்மண். அதிக உப்பு உள்ள இடங்களில் வெண் மண். ஆயிரக்கணக்கான sq kilometers களுக்கு 360 degrees இல் நிலா, நட்சத்திரங்கள் சூழ் நீல வானம் மட்டுமே தூர இணையும் காட்சியை உங்களால் நினைக்க முடிகிறதா ? யாருமற்ற நீங்களும், நீல வானமும், வட்டக் கோடாய் உங்களை சுற்றித் தாங்கும் பூமியும் .. Heaven !

Little Rann Of Kutch இல் Ragu G ஒரு சாதனையை சத்தம் இல்லாமல் செய்திருக்கிறார். நானும் Rathinavelu Muthusubramanian just உடன் பயணித்தோம். Little Rann of Kutch ஐ பொதுவாக குறுக்காக கடக்க யாரும் முயல்வதில்லை. GPS work செய்யாத, network இல்லாத, ஆட்கள் அற்ற, வழிகாட்டும் பலகை எதுவும் இல்லாத, எங்கு பார்த்தாலும் வானும் மண்ணும் இணையும் காட்சி தவிர எதுவும் அற்ற... என்ன நினைக்கவே பயமாக இருக்கிறதா ? அதைத்தான் ரகு செய்திருக்கிறார். ஒருவேளை lost என்றால், கண்டறிவது மிக சிரமம் ! அநேகமாக அதற்குள்ளாகவே, சரியாக அல்லது தவறாக, எதுவும் புரியாமல்... சுற்றிக்கொண்டு இருந்திருக்க வேண்டிய நிலையாக இருக்க கூடும். இந்த Little Rann of Kutch ஐ ரகு குறுக்காக கடந்திருக்கிறார். அதாவது கிட்டத்தட்ட 70 plus kilometers. அவ்வளவு எளிதான விடயம் அல்ல இது !

பொதுவாக பயணம் செய்பவர்கள் ஒரு கட்டத்தில் பயம் என்ற ஒன்றுக்கு முன் சரண் அடைந்து பின் வாங்குவார்கள். ரகு அப்படி அல்ல. முதலில்

தொழிலில் இருந்து ஒரு சிறிய break எடுக்க முழு தைரியம் வேண்டும். பின் பயணத்தில் முழுவதுமாக பயணிக்க வேண்டும். பின் .. பயணத்தில் sudden முடிவுகளை intuitive feel இல் எடுக்க வேண்டும். Infinity decisions எனப்படும் அவை backfire ம் ஆகக்கூடும். ஆனாலும் ... பயணிக்க ஒரு தனி தில்லு வேண்டும் ! அந்த Pro Shoe க்களை கொஞ்சம் எறிந்து விட்டு வெளியே தான் வர இன்னொரு level தைரியம் வேண்டும் !

எப்படி இந்த 70 plus Kilometers களை கடந்தோம் ? என்ன நடந்தது ? எப்படி முடிந்தது ?

முதலில் Little Rann of Kutch க்குள் செல்லும் முன், ஒரு சிறு தயக்கம் இருந்தது உண்மை. ( தயக்கம் தான் .. பயம் அல்ல ! ). நான் பொதுவாக தேநீர் கடைகளில் செய்திகள் சேகரிப்பது உண்டு. அப்படி ஒரு தேநீர் கடையில் ... சேகரித்த செய்தி கொடுத்த தெளிவு பயணத்தை ஆரம்பித்து வைத்தது.

" வாச்ர டா தாதா என்கிற மனிதர் இங்கு மாடுகளை காக்கும் தெய்வமாக மாறி இருக்கிறார். அவரின் ஆலயம் 27 கிலோமீட்டர் தொலைவில் உள்ளே இருக்கிறது "

இவ்வளவு தான் தகவல். இந்த தகவல் எங்களை 27 kilometer பயணிக்கும் தெளிவை கொடுத்தது. ஆனாலும் 15 Kilometers க்கு பிறகு குழப்பம் வந்தது. வெய்யில் கொழுத்துகிறது. ஆனாலும் காற்றில் குளிர் கலந்து. தண்ணீர் தாகம் எடுக்க, கண் முழுக்க .. நீலமும், செம்மண் வண்ணமுமாய் .. நம்பிக்கையுடன் பயணம் தொடர .. 20 Kilometer கடந்த பின் .. இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவர் ஆலய வழியை சரியாக கொடுத்தார். அவரை சந்திக்கவில்லை எனில் .. வேறு பாதையில் சுற்றிக்கொண்டு இருந்திருப்போம்.

ஆலயம் அழகாக 2500 மாடுகளுடன் இருக்கிறது. நம்ப முடிகிறதா ? எந்த விதமான bore machine உதவியும் இன்றி .. அந்த பாலைவனம் போன்ற பகுதியில் .. கிட்டத்தட்ட 700 800 ஆண்டுகளாக நீர் ஒன்று ஊற்றாக வருவதை நம்ப முடிகிறதா ? அப்படி ஒரு நல்ல சுவை அந்த தண்ணீர் - மாடுகளுக்கு அங்கே இருக்கும் ஒரே தண்ணீர் வாய்ப்பு அதுவே என்பதை நம்ப முடிகிறதா !?.
அங்கே கொஞ்சம் தகவல்களை சேகரித்து பலசாவா என்கிற இடத்தை நோக்கி பயணம் தொடர்ந்தோம். இந்த 2.0 பயணம் மிகவும் கடினமானது. ஒரு வழி miss செய்தால், வேறு பக்கம் காணாமல் போக வாய்ப்புண்டு. அப்படி miss செய்தும் வேறு பக்கம் போனோம். அப்போது அங்கு motorbike இல் வந்த இருவர் வழியை தவறாக வந்ததை சொல்ல .. திருப்பி பயணித்து அவர்கள் சொன்ன சரியான வழியை தொட்டோம். ஆனால் அவர்களே மீண்டும் எங்களை நோக்கி பயணித்து, அவர்கள் சொன்ன

பாதையும் தவறு என்று நிறுத்தினர். அதுதான் kutch ! அங்கே வாழ்பவர்களுக்கே வழி தெரியவில்லை. அதேபோல் .. தான் தவறாக சொல்லி விட்டோமே என்று மீண்டும் பயணித்து நம்மை திருத்தும் மனிதம் !!!

No Man Land எப்போதுமே நம்மை ஈர்ப்பவை. மனிதர்களுடனும், கட்டிடங்களுடனும், தொழில்களுடனும், பிரச்சினைகளுடனும், பேராசைகளுடனும், ஜாதி மத என்கிற குறு எண்ணங்களுடனும், போராடும் நாம் ... சட்டென அனைத்திலும் இருந்து விடுபட்டு .. ஆள் அற்ற வெளியில் நாமே தொலைவதும், நாமே நம்மை கண்டுபிடிப்பதும் .. போல ஒரு ஆனந்தம் உண்டா என்ன இந்த உலகில் !?

அந்த நீல வானம் மனித எண்ணங்களின் மாசுபாடு இல்லாமல், அள்ளித்தெளித்த நட்சத்திரங்களுடன் அமர்க்களமாக தலைக்கு மேலே நிற்கிறது. இப்படி ஒரு வானத்தை இழந்து, குப்பைகளுக்கு அருகில், air conditioned அறையில் வசிப்பதை மனிதன் நாகரிகம் என்று எப்போது சொன்னானோ ..அப்போதே ஆரம்பிக்கிறது அவன் அக அழிவு.

கழட்டி வைத்த Shoe க்கள் கால்களையே கவனித்து கொண்டு இருந்தன - மீண்டும் வந்து சேருவதற்காக !. இல்லை ... இன்னும் சில நாட்களுக்கு, வெறும் கால்களுடன் மட்டுமே பயணிப்பேன். பயணிக்க வேண்டும். தரையோடு கால் படுதலில் .. அகம் நிறைவு பெரும் நிறைவு நடக்கட்டும்.

ஆம். பணம் சேர்த்தல் மட்டுமே வாழ்வு அல்ல !




#தீராஉலா2point0: 008 ;

96 படம் பார்த்தவுடன் சில personal அழைப்புகள்/ செய்திகள் - " படத்தின் முதல் பாடலை பார்க்கும் போது உங்களின் ஞாபகம் " - நான் படம் பார்க்கும்போது தான் ஏன் சொன்னார்கள் என்று புரிந்தது ! ஆம். பயணங்களில் என்னை நான் மட்டுமே கவனிக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு இருந்தேன். என்னை நான் மட்டுமே கவனிக்கவில்லை என்று தெரிகிறது. நன்றிகள் அனைவருக்கும்.

இந்த காட்சிக்கு என்ன பாடல் சேர்க்கலாம் என்று யோசித்தபோது சட்டென மனதிற்கு வந்த பாடலை Anuthama Radhakrishnan விடம் சொன்னேன். அழகாக இணைந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. பார்க்க பார்க்க மிகவும் பிடிக்கிறது.

Rathinavelu Muthusubramanian Drifting எனப்படும் இதில் specialist. " செய்யட்டுமா " என்று கேட்டார். " செய்யுங்கள் " என்று சொன்னேன். 360 degree நீல நிலப்பரப்பில், 360 degree யில் City சுழல, அதை Slow Motion இல் படம் எடுக்க தோன்றிய நினைவுக்கு முழு நன்றி.

என்னவோ தெரியவில்லை ! இந்த video எனக்கு மிக நெருக்கமான இடத்தில் அமர்கிறது. பாடலா, அல்லது காட்சியா, அல்லது பயணமா,

அல்லது மனநிலையா .. இல்லை எல்லாம் சேர்ந்தா ... என்னவென்றே தெரியவில்லை. ஆனால் .. மிக நெருக்கமாக !

City car City க்குள் மட்டும் என்று யார் சொன்னது ? சம்பாதித்து, car ஒன்று வாங்கி, ஒரே சாலையில், காலையும் மாலையும் சென்று, வீட்டிற்குள் அந்த Car ஐ நிறுத்தி, அதை அட்சர சுத்தமாக வைத்துக்கொள்ள நினைக்கும் உங்களுக்கு சில கேள்விகள்...

" அவ்வளவுதானா அந்த Car க்கான எழுதப்பட்ட வாழ்க்கை ? "


" அவ்வளவுதானா அந்த Car ன் விதி ? "

" நகர நரக வாழ்க்கைக்கு மட்டும்தான் Car ஆ ? "

" சுத்தமான Car என்று போட்டி ஏதாவது நடைபெறுகிறதா ? "

" ஆரோக்கியம் வேறு. நான் சொல்லும் ego representating சுத்தம் வேறு என்று உங்களுக்கு புரிகிறதா ?

யோசிப்போம்.




#தீராஉலா2point0: 009 ;

அந்த பறவையின் அமைதி என்னை அசத்தியது. யாருமற்ற தேசத்தில், அதுவே ராஜா / ராணி. எங்கோ வீசும் காற்றின் சத்தத்தை கேட்டுவிட்டு, தலை திருப்பி கவனித்து, அப்படியே அதன் equilibirium மில் இருந்து எந்த அசைவும் இல்லாமல் இருந்தது. அதை பொறுத்தவரை காற்று அதன் நண்பன்.

Cellphone அங்கே வெறும் camera மட்டுமே. மற்றபடி அது ஒன்றுக்கும் பயனில்லாத plastic cover. Technical advancement இல்லாததால் அந்த பறவை அதன் இயல்பில் என்னை கவனித்தது. என் அருகாமையில் அதற்கு பயம் இல்லை. பொதுவாக பறவைகள் மனிதனுடன் நட்பாகவே இருக்க விரும்புகின்றன. Technical பிரச்சினைகள் தான் அவற்றின் எதிரிகள். Technical பயம் அதன் உயிரை எடுத்து, நம்மிடம் இருந்து அவற்றை பிரிக்கிறது. இதை நமக்கு எடுத்து சொல்ல ஒரு ரஜினி, ஒரு சங்கர், ஒரு 2.0 தேவைப்படுகிறது. சிரிப்பாக இல்லை ?

சூரிய அஸ்தமனம் நடந்ததும் பொதுவாக கட்ச் வெளிச்சம் அற்ற நிலமாக மாறிப்போகும். நட்சத்திர வானம் அதன் குடையாக மாறிப்போகும். காற்று ஏற்படுத்தும் ஒலியில், மௌன தேசம் அழகாகிக்போகும். ஒரே ஒரு முறை இரவில் தங்கினால் அந்த மௌன தேசத்தின் காற்றொலி கேட்கும்.

நமக்கு கொஞ்ம் பயம் ஏற்படுத்தும் விடயம் அது. நாம் தான் காற்று சத்தத்தை கேட்பதே இல்லையே ?

வழியில் ஒரு வல்லூறு கவனித்தேன். பெரியது. ஒரு முயலை அப்படியே தூக்கிவிடும் என்று முத்து சொன்ன போது ஆமாம் என்று சொல்ல தோன்றியது. அருகே சென்று நின்ற போதும் நகரவில்லை அது. ஆம். பறவைகள் மனிதர்களை நட்பாகவே உணர்கின்றன. Technical advancement தான் பறவைகளின் பயம். கையில் வைத்திருக்கும் ஒரு cellphone ஏதோ ஒரு பறவையின் தலைக்குள் இருக்கும் Google map ஐ அழித்துவிட்டு நம் map ஐ காண்பிக்கிறதோ என்று ஒரு ஐயம் எனக்கும் உண்டு !

என்ன .. உங்களுக்கும் அப்படி தோன்றுகிறதா ?




#தீராஉலா2point0 : 010 ;

நிறைய யோசிக்கிறோம். ஆனால் செய்கிறோமா ? அங்கே தான் இருக்கிறது கனவு மெய்ப்படுதல்.

கட்ச் எனக்கு புதியது அல்ல. ஆனால் என்னுடன் வந்த இருவருக்கும் புதியது. அவர்களுக்கு இந்த பகுதியை விளக்கி சொல்லும் பொறுப்பும், கூடவே அவர்களின் மகிழ்வு கண்டு மகிழும் பொறுப்பும் என்னுடையது. 360 degree வெண்மையாக ஒரு உலகத்தை அவர்கள் பார்ப்பது இதுவே முதல் முறை.

2018 February யில் விபத்து நடந்தபோது மனதிற்குள் " மீண்டும் பயணிப்பேனா? " என்கிற எண்ணம் இருந்தது - எனக்கில்லை, மற்றவர்களுக்கு. அதீத நம்பிக்கைக்கு இன்னொரு பெயர் திமிர் என்று கூட மற்றவர்களுக்கு தெரியலாம். ஆனால் எனக்கு அது வெறும் நம்பிக்கை மட்டுமே. விபத்து நடந்து நான் மீண்டும் யதார்த்த நிலைக்கு

திரும்பியபோது எனக்குள் சொல்லிக்கொண்டது .. " ஏற்கெனெவ பயணித்த அதே பகுதிகள் அனைத்தையும் மீண்டும் சென்றடைவேன் ".

ஹரப்பா நாகரிகம் பகுதிகளை பார்வையிட்டு திரும்பும்போது மனதிற்குள் எழுந்த கேள்வி ஒன்று ... " நகர்ந்த ஆற்று நாகரிக மனிதர்கள் தானே நாம் ? - இப்போது ஏன் நகர மறுக்கிறோம் ? ". Settlement என்கிற பெயரில் நம் searching மனதையும் settle செய்து விட்டோம் போல் !

Little Rann of Kutch இல் நான் தொலைந்து என்னை கண்டுபிடித்தேன். இங்கு சாலை இருப்பதால் தொலைய வாய்ப்பில்லை. ஆனாலும் கொஞ்ச தூரம் உள்ளே சென்றதும் 360 degree வெண்மையில் .. எந்த பக்கம் வந்தோம் என்று மனம் குழம்புவது உண்மையே ! குதித்து புகைப்படம் நான் எடுத்து நீண்ட நாட்களுக்கு பின் தீரா உலா 1.0 இல் எடுத்தேன். இப்போது 2.0 வில். அநேகமாக " குதித்தல் புகைப்படம் " தீரா உலாவின் TRADEMARK ஆக இருக்க கூடும் !!

கையில் என்னுடன் பயணிக்கும் MI Band - நட்பு present செய்தது. நல் நினைவுகளின் சொந்தமான அது, என்னை கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கிறது. Fitness ok ...ஆனால் Shape ? .. ஆம். January February ஐ அதற்காக ஒதுக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தீரா உலா வில் அடுத்த பயணத்திற்குள் appearance fitness முக்கியமானது என்று தோன்றுகிறது.

Dholavira ஒரு முறை செல்லவேண்டும் நீங்கள். நம் முன்னோர் இப்படித்தான் இருந்தார்கள் என்பது அங்கே ஆச்சர்யம் கொடுக்கும் செய்தி. அவர்களின் பார்வைகள் சிறப்பானவை. மழை நீர் சேகரிப்பு அப்போதே இருந்திருக்கிறது.

மனம் ஏதோ ஒன்று சொல்ல முனைகிறது.

" சரி. சம்பாதித்து ?. சரி. இடம் வாங்கி ?. சரி. வீடு கட்டி ?. சரி. Car வாங்கி ?. சரி.. Bank Balance ? ... எல்லாம் சரி. நம்மை சுற்றி ஒரு உலகம் இருக்கிறதே .. அதை பார்ப்பது எப்போது. எங்கே பிறந்திருக்கிறோம் என்பது கூட தெரியாமல் இறப்பதில் அப்படி என்ன மன மகிழ்வு நமக்கு ?. சேர்த்தவைகள் எல்லாம் கொடுக்காத நிறைவை பயணங்கள் ஏன் கொடுக்கின்றன ? " நிறைய கேள்விகள். நிறைய பதில்கள்.

ஒரே ஒரு இறுதி கேள்வி.

" இன்று இறப்பு வருகிறது எனக்கு எனில், நேற்று வரை வாழ்ந்த வாழ்வை நினைத்து... மகிழ்ந்து... சிரித்து .. Bye சொல்ல முடியும் என்னால். உங்களால் முடியுமா ? "

வெறும் பயண தகவல்கள் மட்டுமே பயணங்கள் அல்ல. பயணங்கள் நம்மை மீண்டும் உருவாக்குபவை. அவற்றை பகிர்வோம். யாரோ ஒருவருக்கு அது முக்கியமான பகிர்வாக இருக்கக்கூடும் !










#தீராஉலா2point0: 011;

ஏன் இப்படி குதிக்க தோன்றுகிறது ? ஏன் நரக வாழ்வில் நாம் இப்படி குதிப்பதில்லை ? எப்போது நாம் இப்படி குதிக்கிறோம் ? மகிழ்வில் ? சுதந்திரத்தில் ? ஆனால் ஒன்று நிச்சயம். மகிழ்வில் மட்டுமே இப்படி குதிக்கிறோம்.

ஏதோ ஒன்று நம்மை கீழே இழுத்துக்கொண்டே இருப்பதால் தான் பயணிக்க முடிவதில்லை ! அந்த கீழே இழுக்கும் ஒன்று என்ன ? குடும்பம் ? பொருளாதாரம் ? தொழில் ? பொறுப்புகள் ? நேரமின்மை ? இதெல்லாம் இல்லை. இரண்டே இரண்டு மட்டுமே.

1. பயம்.
2. நம்மால் மட்டுமே நடக்கிறது என்ற ஒரு எண்ணம்.

பயம் :

என்ன ஆவது ? இதை எல்லாம் விட்டுட்டு போனால் என்ன ஆவது ? என்கிற முதல் கேள்வியின் பயம். அப்படி ஒரு வேளை போனால் " Selfish " என்று உலகம் முத்திரை குத்தி விடுமோ என்ற பயம். போய் வருவதற்குள் வாய்ப்புகள் போய்விட்டால் ? போய் வருவதற்குள் வேலை போய்விட்டால் ? பணம் செலவழிந்தால் ? நேரம் இழந்தால் ? எல்லாம் சரி. இதற்கு இணையாக ஏதோ ஒன்று கிடைக்கிறதே - அதைப்பற்றி என்றாவது யோசத்தோமா ?

நம்மால் மட்டும் நடக்கிறது :

மகா ஆணவ பதில் என்று இதை சொல்வேன். உடல் முடியாவிட்டால் அதே நாம் தான் போர்த்திக்கொண்டு படுத்துக்கொள்கிறோம். எல்லாம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஊருக்கு சாமி கும்பிட்டு வர போகிறோம் .. எல்லாம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. அப்பாவிற்கு உடல் சரியில்லை என்றால் போய் பார்க்கிறோம். ( பார்க்கிறோமா ? ).. எல்லாம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. எதுவும் யாருக்காகவும் நிற்பதில்லை. நாம் இல்லாதபோது, நாம் இல்லாமல் எப்படி நடக்க வைக்க முடியும் என்று யோசித்து செய்துவிடுவோம். எதுவும் யாருக்காகவும் நிற்பதில்லை. நிற்பதாக நம்பிக்கொண்டு ego வளர்த்த சிறு மனிதனாக திரிகிறோம் ! இதில் பணம் சேர்க்கும் பெருமை வேறு !! ( என்னவோ சுற்றுபவர்கள் எல்லாம் பணம் சேர்க்காமல் திரியும் useless போல ஒரு பெருமித பார்வை வேறு இதில் !!! ☺ ). SYstem செய்ய வேண்டியதை மனிதன் செய்தால் நகர முடியாமல் மாட்டிக்கொள்வான். System செய்தால் மனிதன் release ஆகி விடுவான். System செய்ய முடியாமல் போவதற்கு நாம் பொறுப்பு என்று பெயரிட்டு ... ஹய்யோ ஹய்யோ .. !

என்ன செய்யலாம் ?

மூன்று மாதம் கடுமையான உழைப்பு. ஒரு வாரம் காணாமல் போய்விட வேண்டும். குடும்பத்துடன். தனியாக. கணவன் மனைவியாக. அப்பா பிள்ளை, அம்மா மகள் .. அண்ணன் தங்கை ... எப்படி வேண்டுமானாலும் ! வருடம் நான்கு முறை தொலைந்து உங்களை நீங்கள் மீண்டும் கண்டெடுக்க வேண்டும். அப்படி கண்டெடுத்து மீண்டால் ?


உங்களை சுற்றி இருக்கும் ஒரு Balanced நிலை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுவது நடக்கும். அது உங்களின் வெற்றி அல்ல. உங்களின் பயணங்களின் வெற்றி. உங்களை அது உருமாற்றி இருக்கும் வெற்றி ! அது கொண்டுவரும் குடும்பம், புரிதல், தொழில், நட்புணர்வு, விரிவாக்க சிந்தனைகள் ... இதற்கு இணையாக மாறுமா நம் Bank Balance ? ( Bank Balance

ம் தேவை. ஆனால்... மேற்சொன்னவைகள் இல்லாத Bank Balance ? ... மனம் நிம்மதி அற்ற ஓவியன் வரைந்த ஓவியம் போல அது .. தன்னையே கிறுக்கி கொள்ளவும் செய்யும் ! )

@தீரா உலா குழுவின் Trademark ஆக இந்த குதித்தல் இருக்கட்டும். ஆம். வருடத்தில் நான்கு முறை. ஏதோ ஒரு ஆற்றின் அருகாமையில், மலைக்கு பக்கத்தில், ஏரியில், பாலைவனத்தில், கோட்டைக்கு அருகில், நீர்வீழ்ச்சியில் ... ஆம். இங்கே எல்லாம் ஒரு " வான் நோக்கிய குதித்தல் "இருக்கலாம். தலை மேல் நோக்கி இருக்கட்டும். கவனம் முழுக்க safety யில் இருக்கட்டும்.

Kathirbet ன் தன்னை மறந்த குதித்தல் நிகழ்வு இது !






#தீராஉலா2point0:012 ;

சில பயண விபரங்கள் இங்கே கொடுக்கிறேன். குறித்து வைத்து கொள்ளலாம்.

1. அகமதாபத்தில் இருந்து zainabath
2. Zainabath இல் இருந்து Vaachra da dada Manthir
3. Vachra da dada manthir இல் இருந்து palasawa

இந்த மூன்றும் சேர்ந்து பயணிக்க முடிந்தால் Little Rann of kutch ஐ கடந்த முதல் சிலரில் நீங்களும் ஒருவராவீர்கள் !

4. Palasava வில் இருந்து Dolavira பயணிக்கும்போது - kathirbet இல் வரும் இருபக்க Rann of Kutch - வாழ்வில் நிச்சயமாக பார்க்க வேண்டிய ஒன்று.

( ஆனால் இது கொஞ்சம் Risk ஆனது. வழி தவறினால் எங்கு செல்கிறோம் என்று தெரியாமலேயே எங்காவது மாட்டிக்கொண்டு அலையக்கூடும் ! )

5. Kathirbet இல் இருந்து Dolavira பயணித்து - ஹரப்பா நாகரிக வாழ்வினை படிக்கலாம். 09.00 மணி முதல் 04 மணி வரை மட்டுமே இது. வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை.

6. இந்த செய்தி தான் மிக முக்கியம். ஹரப்பா பார்த்துவிட்டு mostly மக்கள் திரும்பிவிடுவர். அங்கே முக்கியமான மந்திர் ஒன்று இருக்கிறது. ஆம். இந்திய பாகிஸ்தான் எல்லையின் கடைசி புள்ளி அது. அதன் பெயர் கரணி மாதா ஆலயம். அங்கே தெரியும் Sunset உங்களை மயக்குவது 100% உண்மை.

7. இங்கிருந்து பக்கத்திலேயே fossil park என்று ஒன்றும் உண்டு.

---------------------------------------------------------------

இப்போது புகைப்படங்களுக்கு வருவோம்.

கோவிலின் பிரதிபலிப்பு car பின்புற கண்ணாடியில் தெரிய, அந்த புகைப்படம் உடனே எடுக்க தோன்றியது. அநேகமாக அனைத்து எல்லை பகுதியிலும் ஒரு கடவுள், ஏதோ ஒரு பெயரில், ஏதோ ஒரு ஆலயத்தில் வாழ்கிறார். அவரின் முன் வழிபட்டு போருக்கு செல்வதும் உண்டு !

என்னுடைய Trademark Shot களில் ஒன்றான - Car ன் கதவுகளை திறந்து ஒரு புகைப்படம் எடுத்தேன். அந்த பக்கம் Rann of Kutch. இந்த பக்கம் இந்தியா. Rann of Kutch பகுதிக்கு அந்தப்பக்கம் பாகிஸ்தான். ஒருவேளை சாலை என்று ஒரு வாய்ப்பு இருந்தால், பாகிஸ்தானுக்கு நான் பயணிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. ஒரு காலத்தில் நாம் ஒன்றாக வாழ்ந்தவர்கள் தானே ?

ஒரு இந்திய வீரரிடம் பேச நேர்ந்தது. அவர் பேசியதை அப்படியே கேட்போம் ..

" அசாமில் இருந்து வருகிறேன். இதோ இங்கே தான் தங்குகிறேன். ( BSF camp ). யாரும் இங்கு வருவதில்லை. Network கும் கிடைப்பதில்லை. மரம்

செடி கொடிகளுடன் பேசிக்கொண்டு காலத்தை ஓட்டுகிறேன். அதோ அந்த மலைக்கு மேலே சென்றால் signal ஒரு புள்ளி கிடைக்கும் " விரக்தியாய் சிரிக்கிறார்.

இராணுவ வீரர்களை நீங்கள் பார்த்து, பேசி, பழக ஆரம்பித்தால் ... சினிமா hero க்கள் ஏற்படுத்தும் மாயங்களில் இருந்து விடைபெருவீர்கள். இராணுவ வீரர்களே உண்மையான heroக்கள் / வீர்கள் ! பேசி விடைபெரும்போது ...அனைத்து Water Can களிலும் தண்ணீர் நிறப்பிக்கொள்ள சொன்னார். செய்தோம். அப்படி ஒரு சுவை - அந்த தண்ணீருக்கும், அதை அளித்த நட்பிற்கும்.

ஹரப்பாவில் கல் சுவற்றில் Ragu G தன் உடலை சாய்த்து நின்றார். பொதுவாக நம் முன்னோர்கள் ஏதோ ஒரு நாகரிகத்தின் வழி தோன்றல்கள். அந்த நாகரிக வழி தோன்றிய இடம் பார்த்ததும் யாராக இருந்தாலும் மனம் நிறையக்கூடும். அப்படி நிறைவாக இருந்தார் ரகு. Rathinavelu Muthusubramanian ஹரப்பாவின் அழகில் மயங்கி நின்றிருந்தார்.

எல்லாம் பார்த்து திரும்ப ஆரம்பித்த போது சரியாக இருட்ட ஆரம்பித்தது. குளிரும் அதிகமாக .. நட்சத்திரங்களை பார்த்துக்கொண்டே Car நகர்தலை ரசித்து கொண்டு இருந்தேன். மொத்த இருட்டில் நானும் நட்சத்திரமும் என்று ஒரு கவிதை எழுத தோன்றியது.

இதையெல்லாம் கவனிக்க நீங்கள் எப்போது தயாராவீர்கள் ?

இல்லை ... பணம்/பொறுப்பு/தொழில்/தன்னால் தான் நடக்கிறது .. என்று காரணங்கள் கண்டறிந்து ... பார்ப்பதே உலகம் என்று வாழப்போகிறீரா ?

யோசிப்போம். பயணிப்போம்.




#தீராஉலா2point0 : 013 ;

இந்திய பாகிஸ்தான் எல்லை. குஜராத். நாராயண் சரோவர். தனியாக கடலின் எல்லையில் சிவன் கோவில். நகரின் எல்லையில் விஷ்ணு கோவில். விஷ்ணு கோவில் ஒரு அரண்மனையாக இருந்திருக்க வேண்டும். அரண்மனை வாயில் போன்ற அமைப்பில் 15 அடி உயர மரக்கதவு. அவ்வளவு அழகான வேலைப்பாடு. அவ்வளவு உயர கதவு தாண்டி, கொஞ்ச தூரம் நடந்தால் சிறு கதவு. சிறு கதவில் தலை குனிந்து உள்ளே சென்று பார்த்தால் ...

அவ்வளவு அழகாக ஒரு கோவில் அமைதியாக .. நிற்கிறது. மந்திர சத்தங்கள் ஒலிக்க, மனிதர்கள் அநேகமாக தாங்கள் செய்த பாவங்களை ஒவ்வொன்றாக நினைத்து .. மௌனமாக நிற்க, வேண்ட, அமர்ந்திருக்க .. ஆக .. மன்னிப்பு கேட்பதும், மன்னிப்பதும் .. ஒரு சேர நடக்கும் மனசாட்சியின் வெளிப்புற வடிவம் தான் கோவில் போல !

கோவிலுக்குள் வழக்கம்போல விஷ்ணுவுக்கு முன் அமர்ந்திருக்கும் அர்ச்சகர் மந்திரம் ஒன்றை ஓதிக்கொண்டு இருக்க ... சட்டென பார்வையில் பட்ட சிற்பம் மனதை அதனை நோக்கி இழுத்தது. பொதுவாக கோவில்களில் பெண் சிற்பங்களை நான் பார்த்த விதத்தில் இருந்து இவை

விலகி இருந்தன. முறுக்கு மீசையும், கோபக்கார பார்வையுமாக ஆண் சிலைகள் இழுக்க, சங்கீத உபகரணங்களை கையில் பிடித்த படி பெண் சிலைகள். கையை கிள்ளி பார்த்துக்கொண்டேன். பொதுவாக பெண் சிலைகளின் வடிவமைப்பு அவர்களின் புற அழகை மட்டுமே வெளிப்படுத்தும்படி இருக்கும். ஆனால் இங்கு அப்படி அல்ல. பெண் சிலைகள் அனைத்தும் கையில் இசை வாத்தியங்களை கையில் வைத்திருந்த படி .. அப்போதே பெண்கள் இசைத்திருக்க வேண்டும். அதுவும் extraodrinary யாக இசைத்திருக்க வேண்டும். அதுதான் அவர்களின் திறமையை கோவிலுக்குள் சிலையாக வைக்கும் அளவிற்கு அரங்கேற்றம் செய்திருக்கும். ஒவ்வொரு சிலையும் ஒன்றை மற்றொன்று மிஞ்சும் வகையில் !

கட்ச் பெண்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட ஆடை அமைப்பும் அதில் தெளிவாக தெரிய, ஆண்கள் கம்பீர மீசைகளும், மையிட்ட பெரு முழிகளும், தலைக்கு துணிக்கவசமும், பெரிய காதுகளுமாய் .. நிற்க .. எனக்கு உள்ளுக்குள் என்னமோ செய்ய ...புகைப்படங்கள் மன குழந்தைகளாகி, பின் Camera குழந்தைகளாக ... பிறந்தன. பார்த்தவுடன் எச்சில் ஊற வைக்கும் visual குழந்தைகள் அவை !

பொதுவாக என் புகைப்படங்களை Anuthama Radhakrishnan அவர்கள் Video பதிவாக மாற்றுவார். என்னமோ தெரியவில்லை .. நீண்ட நாளைக்கு பின் video செய்வோம் என்று மனதிற்குள் தோன்ற .. பொறுமையாக செய்து முடித்து ஒருமுறை முழுமையாக பார்த்தபோது .. மனதிற்குள் என்னவோ ஒரு சொல்ல முடியா மகிழ்வு !

இந்த Video வை இன்று பிறந்த நாள் காணும் Senthil Kumar Vaishu Kumar HV அவர்கள் மூவருக்கும் சமரப்பிக்கிறேன்.

அவர்களுடன் .. @தீரா உலா வின் அனைத்து மனங்களும் இதை கண்ணால் சுவைக்கலாம்.




#தீராஉலா2point0: 014 ;

Kalo Dungar :

இந்திய பாகிஸ்தான் எல்லை. KAlo - கருப்பு Dungar - குன்று/மலை ... கருப்பு மலை என்று சொல்லலாம். மேலே நின்று பார்த்தால் பாகிஸ்தான் எல்லை தெரிகிறது. INdia Bridge ஒன்றும் தெரியும். அதுவே எல்லை. அதற்கு பின் 70 /80 kilometer தொலைவில், நம் முன்னாள் சகோதர அரசியல்வாதி, இந்நாள் நட்பு மக்களை எதிரிகளாக மாற்றும் களம் இருக்கிறது.

இந்த Kalo Dungar இல் இவரை பார்த்தேன். ஏதோ இரு இசைக்கருவிகள், வானம் பார்த்த படி பாடும் பாடல், அழகான சிவப்பு முண்டாசு, வித்தியாசமான குரல், அசாதரண பார்வை, எதிர்பார்ப்பிலா இசை பரவல் ... என்ன ஒரு நிலை அது ! அவ்வளவு பெரிய பரப்பும் அந்த ஒரு இசையில் மயங்கி நிற்க .. பக்கத்தில் இருக்கும் மனிதர்களில் சிலர் கவனித்து

மரியாதிப்பதும், பலர் பார்க்காமல் தேவையற்றதை பேசிக்கொண்டிருப்பதும் .. மனித அறிவு முரண்.

பாடி முடித்த பின், பலர் எறியும், கொடுக்கும், பணத்தினை .. ஒரு அநாயச பார்வையுடன் பார்கிறாரே .. அங்கு நிற்கிறார் அவர். என்ன சொல்கிறது அந்த பார்வை ! ?

* என் இசையை உன் பணத்தால் வாங்க முடியாது !

* என் இசையை உன்னால் இந்த அளவு தான் ரசிக்க முடிகிறதா ?

* ஹஹஹஹ ..

* இந்த மக்களுக்கு புரிகின்ற மாதிரி இன்னும் பாட வேண்டும் ...

என்ன அந்த பார்வை சொன்னாலும், அந்த பார்வை ராஜ, ராஜா பார்வைதான் ! அதில் எள்ளளவும் மாற்றம் இல்லை.

இசையை கொஞ்சம் கேளுங்கள். மீண்டும் கேளுங்கள். மீண்டும் மீண்டும் கேளுங்கள். அவர் உங்களுக்குள் பாட ஆரம்பித்துவிடுவார். நிறைய இளையராஜாக்கள் இன்னும் இருக்கிறார்கள் - கண்டு பிடிக்க படாமலேயே !




#தீராஉலா2point0: 15;

வெண்மையான Marble களால் ஒரு கோவில் எழுப்பப்பட்டால், அதன் சுத்தம் அப்படியே காக்கப்பட்டால், அங்கு உங்களால் சில நிமிடங்கள் மௌனமாய் அமர முடியும் எனில் ... இந்த Video வின் பக்கங்கள் உங்களுக்கு புரியலாம் !

வெண்மையாக நிற்கிறது செதுக்கப்பட்ட பளிங்கு மலை. குளிர்ச்சி காலை தொட்டு, உடலுக்குள் ஊடுருவுகிறது. காற்று உடலை தடவி ஒருவித ஆறுதலை கொடுக்கிறது. தியான நிலையில் இருக்கும் சிலைகள் நம்மை " எப்போதுதான் நிற்பாய் நீ ? " என்று கேள்வி கேட்கின்றன. யாரோ ஒரு மௌனி யோகியின் கண்கள் நமக்குள் குடைந்து ஒரு stillness ஐ ஏற்படுத்துகின்றன. வரிசையாய் அமர்ந்திருக்கும் யோகிகள் எதுவும் நடக்கா உலகில் இருப்பதுபோல தெளிவாக சிரிக்கிறார்கள்.

பறவைகள் பயம் இன்றி அருகில் வந்து அமர்கின்றன. பறவைகள் அருகில் அமர்ந்தால் அந்த மனிதனை நம்பலாம் என்று எங்கோ படித்த ஞாபகம். நான்கு புறாக்கள் ஒன்றை ஒன்று வெகு நேரமாக அலகால் அணைத்து

கொண்டு விளையாடுகின்றன. ஏதோ ஒரு பெயர் அற்ற பறவை பளிங்கு கூரையின் மேல் அமர்ந்து " நானே ராஜா " என்று சிரிக்கிறது. மொத்த கோவிலும், சத்தத்தை துடைத்து எடுத்து, மௌனத்தை நிலை நிறுத்தி நம்மை ஒரே ஒரு கேள்வி கேட்கின்றன.

" இவ்வளவு அமைதி இருக்கிறதா உன்னுள் ? "

Video வை மெதுவாக செல்லுமாறு செய்திருக்கிறேன் - ஒவ்வொரு படத்தையும் நீங்கள் பொறுமையாக பார்க்க வேண்டும் என்று. அப்படி பார்க்க முடியாமல் சில seconds களில் நீங்கள் வேறு பக்கம் திரும்பினால் .. ஒன்று இந்த புகைப்படங்கள் சரி இல்லை என்று அர்த்தம். அல்லது .. உங்களுக்கு " வேக வியாதி " வந்திருக்கிறது என்று அர்த்தம். அவ்வளவே.

ஏன் இப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் பயணிக்க வேண்டும் ?

பதில் மிக சுலபமான ஒன்று.

கடிகாரத்தில் with reference to - என்றே காலம் நிர்ணயம் ஆகிறது. எந்த வித குறியீடும் அற்ற ஒரு உபகரணத்தை கடிகாரம் என்று சொல்ல முடியுமா நம்மால் ? அது .. Just ஒரு டப்பா. அதேபோல .. பயணம் ஒரு Reference. நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை ஒரே ஒரு பயணம் சொல்லிவிடும். குறிப்பாக ..

" திட்டங்கள் அற்ற பயணம் " சரியாக சொல்லும்.

( என்ன இன்னொரு பயணத்திற்கு February யில் தயாராவோமா ?







[#தீராஉலா2point0](#): 016

இரு ஆளுமைகள் இந்த முறை. இருவரையும் பற்றியும் தெரிந்துகொள்ளலாம்.

1. Ragu G :

கடைசி நொடியில் முடிவெடுத்து பயணத்தில் சேர்ந்தவர். " வராமல் இருந்திருந்தால் வருத்தப்பட்டிருப்பேன் " என்பது அவரின் இப்போதைய பார்வை. இந்த பயணத்தின் மிகப்பெரிய drive - challenging drive - 2. அதில் ஒன்று கிட்டதட்ட 1000kms தொடர்ச்சியாக drive செய்தது. இரண்டாவது .. Little Dann of Kutch சை குறுக்குவாட்டாக கடந்தது. இதில் இரண்டாவது Ragu செய்தது. பொதுவாக drive செய்யும்போது ஒருவித பயம் வரும். யாருமற்ற அத்துவான காட்டில் பயணம் செய்தால் ? வேண்டாம் என்றே மனம் முடிவு செய்யும். ஆனாலும் ..Ragu வின் துணிச்சல் வித்தியாசமானது. சத்தம் இல்லாமல் ஆனால் அழகாக இந்த drive ஐ எந்த படபடப்பும் இன்றி செய்து முடித்ததில் இருக்கிறது அவரின் excellence. நகைச்சுவை அவரின் பிரதான பலம். மென் நகைச்சுவை வடிவை சார்ந்த இது Karpagaraajen Thiyagarajan க்கு opposite வகையானது. தீரா உலா வில் பயனணித்தவர்கள் என்று ஒரு whatsapp group இல் Ragu ஒரு unique personality. இளையராஜாவின் ரசிகர் என்பது கூடுதல் பலம். Sakthi RS இந்த பயணத்தில் சேரும்போது .. பயணம் இன்னும் அழகாகும்.

2. Rathinavelu Muthusubramanian :


A Driving Monk ? .. Driving இல் எந்த அசைவும் உள்ளே இருப்பவருக்கு வராதபடி, அமைதியாக, ஆனால் .. குறிப்பிட்ட வேகத்தில் இவரால் மட்டுமே செய்ய முடியுமோ என்னவோ ? மேலே சொன்ன 1.1000 Kms drive இவருடையது. ஒரு மூன்று அல்லது நான்கு மணி நேர தூக்கம் போதும் இவருக்கு - இன்னொரு 1000 Kilometers drive செய்ய. Vivian Richards இன் look இல் இப்போது வித்தியாசமாய் தெரிகிறார். கவனம் இவரின் பலம். திரும்ப வந்ததும் பெரிய வேலைகள் காத்திருக்கின்றன அவருக்கு. Car க்கு தேவையானவற்றை அழகாக பொறுமையாக செய்யும் திறன். 3500 kms பயணித்தும் Car அப்படியே இருப்பது இவரின் திறன். காலையில் Car ஐ அவர் சுத்தம் செய்யும் அழகே தனி. நாங்களும் சேர்ந்து சுத்தம் செய்தாலும், அவரின் வேலையில் ஒரு distinctive difference இருக்கும். சென்னை அகமதாபாத் பயணத்தில் 70% அவரின் drive.

தீரா உலாவில் பயணித்தவர்கள் " 96 " போல, ஒரே குழுவாக, ஒரு நாள் மாலை சந்திக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. அந்த நாளில் ஒவ்வொருவரும் பழைய நினைவுகளை சொல்லும்போது .. நீண்ட தூர பயணங்களின் சொந்தக்காரர் என்று முத்துவையும், திட மனதின் drive க்கு சொந்தக்காரர் என்று ரகு வையும் intro செய்வேன். வாழ்க்கை பலவாறு மாறிவிடலாம். ஆனால் இந்த பயணங்களின் நினைவுகள் சிப்பி நினைவுகளாக .. குஜராத் என்ற பெயர் பார்க்கும்போதெல்லாம் வந்து விழுந்து கொண்டே இருக்கும். அவ்வளவு எளிதல்ல நீண்ட தூர, நீண்ட

நாள் பயணங்களில் மனம் இலயித்து பயணிப்பது. கடந்த முறை நால்வரை போல இந்த முறை மூவரும் பயணத்தை அழகாக மாற்றி இருக்கிறார்கள்.

ஆம். பயணங்கள் அழகாவது இடங்களால் அல்ல. Flexible மனங்களால். ! மீண்டும் இது நிரூபிக்கப்படுகிறது.




OSIEDLA DZIECI POLSKICH
W BALACZADI KOŁO
DŻAMNAGARU
Z LAT 1942-1946
BALACZADI 1987
BĄDŹ POZDROWIONA
ZIEMIO DALEKA
ZIEMIO PRZYJAZNA
ZIEMIO LUDZKA
DOBRA ZIEMIO


SOUL
WANDERER
Shot on OnePlus
By soul of a wanderer


जामनगर की भूमि को प्रणाम
जिस ने द्वितीय विश्व-युद्ध के
कठोर वर्षों के दौरान
हज़ारों बेघर पोलिश बच्चों को
शरण दी और अपना
अतिथि बनाया
आभारी है पोलिश जनता
और बालाचडी (जामनगर)
शिविर के वे पोलिश छात्र
जो 1942 से 1946 तक यहा रहे
वन्दे दूर की भूमि,
भूमि कृपालु,
भूमि दयालु,
सद्भूमि वन्दे!
W HOŁDZIE ZIEMI
DŻAMNAGARSKIEJ
KTÓRA W TRUDNYCH LATACH
II WOJNY ŚWIATOWEJ
UDZIELIŁA SCHRONIENIA
I GOŚCINY TYSIĄCOWI
BEZDOMNYCH DZIECI
POLSKICH · SPOŁECZEŃSTWO
POLSKIE WRAZ
Z WDZIĘCZNYMI
WYCHOWANKAMI BYŁEGO
OSIEDLA DZIECI POLSKICH
W BALACZADI KOŁO
DŻAMNAGARU
Z LAT 1942-1946
BALACZADI 1987
BĄDŹ POZDROWIONA
ZIEMIO DALEKA
ZIEMIO PRZYJAZNA
ZIEMIO LUDZKA
DOBRA ZIEMIO
Shot on OnePlus
By soul of a wanderer

#தீராஉலா2point0 : 017 ;

இந்த புகைப்படங்களுக்கும், இரண்டாம் உலகப்போருக்கும், ஹிட்லருக்கும், யூதர்களின் அடுத்த தலைமுறைக்கும், தீரா உலா 2.0 பயணத்திற்கும் தொடர்பு உண்டு என்று சொன்னால் நம்ப முடிகிறதா ?

இரண்டாம் உலகப்போர் நடக்கிறது. ஹிட்லர் யூதர்களை கொல்கிறார். யூத குழந்தைகளை தேடி தேடி கொல்கிறார். 100 குழந்தைகள் எப்படியோ தப்பிக்கின்றன. Britain வசம் கிடைக்கின்றன. அங்கிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படுகின்றன. இந்தியாவில் அந்த குழந்தைகளை என்ன செய்யலாம் என்று இந்திய பிரிட்டன் அரசாங்கம் யோசித்த போது, நவா நகரின் மன்னர் ஜாம் சாஹிப் ஞாபகத்திற்கு வருகிறார். அவரிடம் பேசுகிறார்கள். அவர் குழந்தைகளை பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வருகிறார். தனக்காக வைத்திருக்கும் ஓய்வு பங்களாவை அந்த குழந்தைகளுக்கு கொடுக்கிறார். மன்னரின் தனி கவனிப்பில் குழந்தைகள் வளர்கின்றன. படிக்கின்றன. நான்கு ஆண்டுகளுக்கு பின் ... போலந்து செல்கின்றன. ஆம். போலந்தில் இருந்து வந்த குழந்தைகள் அவை.

சென்ற குழந்தைகள் வளர்கின்றன. சமூக வலைதளங்கள் மூலம் மீண்டும் இணைகின்றன. தன்னை வளர்த்த இடத்திற்கு மீண்டும் வர முடிவு செய்கின்றன. வருகின்றன. கண்ணீருடன் நன்றி தெரிவிக்கின்றன. போலந்து நாடு இதை ஏற்பாடு செய்கிறது. போலந்து நாட்டின் Ambassador இந்த இட்த்தை தொட்டதும் .. தரையில் விழுந்து மண்ணை எடுத்து அணிந்திருக்கும் Coat இன் பையில் நிரப்பிக்கொள்கிறார். கண்களில் நீர் அனைவருக்கும்.

அந்த இடம் - Sainik School, Balachadi. அப்படி வந்தவர்களை பாராட்டிய, வரவேற்ற புகைப்படங்கள் மேலே உங்களின் பார்வையில். சரி இதில் தீரா உலா எங்கே வருகிறது ?

Ragu G அமராவதி Sainik பள்ளி மாணவர். நேற்று இந்த பள்ளியை இங்கு எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும் - என்று சொன்னபோது .. உடனே தீரா உலா அங்கு சென்றது. நாங்கள் சென்ற பள்ளி இருக்கும் இடம் balachadi. இடத்தை கொடுத்தது ஜாம் சாஹிப் மன்னர். இங்கே இந்திய இராணுவம் நடத்தும் பள்ளியில் 1942 - 1946 இல் நடந்த ஒரு நிகழ்வை தான் மேலே பகிந்திருக்கிறேன்.

உடல் சிலிர்த்து நின்ற ஒரு உணர்வு. அந்த நினைவிட கல்லில் ஒரு அம்மா குழந்தைகளை அணைத்துக்கொள்வது போன்ற படம் தான் இங்கு முக்கிய பாடம். அகதிகளாக வந்தவர்களுக்கு உணவு உடை இருப்பிடம்

கொடுத்து, படிப்பும் கொடுத்து அனுப்பி இருக்கிறது Balachadi ! ஜாம் சாஹிப் மன்னருக்கு இன்னும் போலந்தில் நல்ல மரியாதை. Bhuj இல் 2001 இல் நிலநடுக்கம் வந்தபோது, போலந்து தான் முதல் நாடாக Balachadi க்கு உதவியது - ஆம் - இந்திய நாட்டின் பணம் இங்கு வருவதற்குள், போலந்தின் பணம் வந்து சேர்ந்திருக்கிறது. அப்படி ஒரு தொப்புள் கொடி உறவு .. இரு நாடுகளுக்கும் இங்கு ஆரம்பிக்கிறது. ஜாம் என்று ஒரு தெரு, போலந்தில் இருப்பதை கேள்விப்பட்டபோது .. " கொடுப்பதால் பெறுகிறோம் " என்பது எவ்வளவு உண்மை என்று புரிந்தது ! இடது பக்கம் இந்தியிலும், வலது பக்கம் polish மொழியிலும் எழுதப்பட்டிருக்கும் இந்த பலகை சொல்வது .... மனித நட்புணர்வை மட்டுமே. ஜாதி மதம் இனம் கடந்த உதவிகள் காலம் உள்ளவரை நிற்கும்!.

இவை அனைத்தையும் எங்களுக்கு பகிர்ந்தவர் ராகேஷ் நாயர். ஆங்கிலத்தில் அழகாகப் பேசிய அவரின் விளக்கங்களுக்காக .. SOW ஒன்றை கொடுத்து எடுத்த புகைப்படம் இந்த பயணத்தில் மிகவும் முக்கியமான ஒன்று. அவரின் பேச்சில் சில வரிகளில் ஒரு வரியை இங்கு பகிர்கிறேன். .. . உங்களுக்கும் உதவலாம்.

" மனிதர்களுக்குள் ஒரே அலைவரிசை கிடைக்கும்போது .. .....பாலம் அதுவாகவே ஏற்படும் "

இந்த பயணத்தின் மிகப்பெரிய தாக்கம் இந்த நிகழ்வில் எனக்குள் ஏற்பட்டது.




#தீராஉலா2point0: 018 ;

பயணித்துக்கொண்டு இருக்கும்போது, சட்டென ஒரு இடம் நம்மை இழுக்கும். நம் கண் ... நீளம், அகலம், வான், மேகம், பூமி, வண்ணம் எல்லவற்றையும் கவனித்து அங்கே நிற்க சொல்லும். அவை அனைத்தையும் தாண்டி இங்கே என்னை இழுத்தது ஒரு பாழடைந்த சுவர். புகைப்படக்காரனாய் சில Structures என்னை மௌனமாய் கவரும். அப்படிக் கவர்ந்த ஒரு இடம்.

அடிக்கடி நான் சொல்வதுண்டு .. " எல்லாம் சரி. ஆனால் தினசரி வாழ்வில், புகைப்பட ஜெய் யை தான் இழக்கிறேன் ". அந்த ஜெய் இங்கே துள்ளி எழுந்ததை உள்ளே என்னால் உணர முடிந்தது. இந்த ஜெய்யை கொண்டு வர .. 10 நாட்கள், ஒரு அழகான பயணம், ஒரு unique structure, நீல வானம் எல்லாம் தேவைப்படுகிறது.

Ragu G விற்கு இடம் பிடித்துவிட்டது. அவர் இலயிப்பதை புகைப்படத்தில் காணமுடியும். Rathinavelu Muthusubramanian இன்னும் ஒரு படி மேலே. முகத்தில் தெரியும் வித்தியாசம் கணிக்க முடிகிறதா உங்களால் ?

இந்த shoot முழுக்க oneplus இல் எடுத்திருக்கிறேன். Canon Mark ll என்னை வாவ் வாவ் என்று இழுத்தாலும்.. Mobile இல் செய்வோமே என்று செய்திருக்கிறேன்.

Video வை பொறுமையாக பார்க்கவும். இந்த Shoot, Video making எல்லாம் சேர்த்து 5 மணி நேரம் ஆனது. சில நிமிடங்களில் கொடுக்க முயற்சித்து இருக்கிறேன். முழுவதும் கவனித்து உங்களின் பின்னூட்டம் வரும்போது, 5 மணி நேர உழைப்பெல்லாம் ஒன்றுமே இல்லை என்று மனம் மகிழும்.

காத்திருக்கிறேன். முழுவதுமாக பார்க்கவும்.

#தீராஉலா2point0: 019 ;

Bet Dwaraka என்று ஒரு தீவு. அதை நோக்கிய 20 நிமிட ferry பயணம். Seagulls இன் இந்த அழகான அழைப்புகளுடன் ! வித்தியாச மனிதர்களின் முகம். தூக்கி எறியப்படும் தீனிகளை கடலில் ஒன்று கூட விழுந்து விடாமல் பறவைகள் பிடிக்கும் இலாவகத்தை பார்த்துக்கொண்டே .... மரிக்கலாம். அவ்வளவு அழகு !

பறவைகளை நிலத்தில் பார்ப்பதற்கும், கடலில் பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம் ? பறக்கும் பறவையின் பிம்பங்கள் நீரில் விழுந்து தெரிப்பதுவே முதல் வித்தியாசம். மனம் ....சட்டென பறவையுடன் நீரில் விழுந்து, நனைந்து ...எழ முடியாது தவிக்கிறது. கூடவே பறவையின் மென் முனகலும் சேர .. நிச்சயமாக கிருஷ்ணா ஒரு ராஜ வாழ்க்கையை இங்கே அனுபவித்திருக்க முடியும் என்றே தோன்றுகிறது ! நீரில் இருந்து எழும் பறவையின் இறக்கையில் இருந்து தெளிக்கும் நீர் மட்டும் போதும் .. 96 விஜய் சேதுபதியின் பாடலை பாட !

" கரை வந்த பிறகே .. பிடிக்குது கடலை ..
நரை வந்து பிறகே.. புரியுது உலகை .. "

பறவைகளால் எப்படி இவ்வளவு அநாசயமாக இயங்க முடிகிறது ?

1. இயற்கையை முழுமையாக நம்புகின்றன.

2. வீடு, bank balance, EMI, Marital Relationship என்றெல்லாம் குழப்பிக்கொள்வதில்லை.

3. உலகமே வீடு என்பதால் நட்புணர்வை unconditional ஆக வாரி வழங்குகின்றன.

4. எந்த Gym க்கும் செல்லாமல் .. உடல் எடையை குறைவாக வைத்திருப்பதில் conscious ஆக இருப்பதால், நீள் பயணங்களுக்கு அவை எப்போதும் தயார். சைபீரியாவில் இருந்தும் தேநீர் அருந்த வருவதை போல வருகின்றன.

5. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று வாழ்ந்து அமைதியாக நிற்கின்றன.

6. சமூக வலைதளங்களில் பதிவதை விட, காட்சிகளால் தம்மை பதிகின்றன.

7. இந்த மீன் எனக்கென்று சொந்தம் கொண்டாடுவதில்லை. கிடைக்கின்ற மீனில் பசி ஆறுகின்றன.

8. கிடைப்பதை உண்டு, நினைத்ததில் பறந்து, சக உதவிகளுடன் .. வாழ்வை வாழ்கின்றன.

9. மனித நகரங்களை அழகாக தவிர்க்கின்றன. அவை நரகங்கள் என்று ஒதுங்குகின்றன. எங்கேயாவது நகரின் நடுவில் பறவைக்கூட்டங்களை காண முடிகிறதா நம்மால் ?

10. ஏரிகளில் தங்களின் பயண நிறுத்தங்களை select செய்கின்றன. அனைத்து ஏரியிலும் ஏதோ ஒரு பறவையின் கால் தடம் முக்கோண பிளவாக நம்மை அழைத்து கொண்டே இருக்கும்.

ஒரு பறவையுடன் நாம் பேச முடிந்தால் நிறைய கற்கலாம். ஆனால் பேசாமல் அவை நடத்தும் பாடங்களை கவனித்தால் ... இன்னும் நிறைய கற்கலாம். மாறலாம். ஒரே இடத்தில் வாழ்ந்து மடியாமல், முடியாமல் ... வாழ்வை அழகாக்கலாம்.

அழகாக்குவோமா ?




#தீராஉலா2point0: 020;

ஒரு சூரிய அஸ்தமனம். Dwaraka Sunset point இல் இருந்து. மனிதர்களை கவனிக்கிறேன். ஓட்டமும் நடையுமாக - நேரம் ஆகிவிடப்போகுதே - சீக்கிரம் சீக்கிரம் மறையப்போகுது - ... மனிதர்கள் தான் எவ்வளவு வித்தியாசமானவர்கள் !! அமைதியாய் கவனிக்க வேண்டியதையும் வேகமாக கவனித்து கடப்பது அவர்களால் மட்டுமே முடியும்.

ஒருமுறை கவனிதத்தை இங்கு பகிர்கிறேன்.

" அதுக்கு தான் சீக்கிரம் கிளம்ப சொன்னேன். " இது கோபமான அவன்.

" ஏன் .. காலையில பேப்பர் படிக்கும்போது late ஆகலையா ? " இது அவள்.

இருவருக்கும் எதிரில் இருந்த சூரியன் அழகாய் மறைவதை கவனிக்காமல் இருவரும் வார்த்தைகளால் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டனர்.

" கல்யாணமே பண்ணி இருக்க கூடாது " - அவன்

" யாரு வர சொன்னா ? " - அவள்.

சூரியன் இன்னும் மௌனமாகவே மறைந்து கொண்டிருந்தது.

இருவரும் வேறு பக்கம் திருப்பிக்கொண்டு நின்றனர்.

அஸ்தமனம் ஒன்று அங்கே சூரியனில் மட்டுமல்ல .. மனித புரிதலிலும் நடந்து கொண்டு இருந்தது.

அவசரம் என்பது கூடவே பிறந்த ஒன்றை போல ...

*காலையில் சட்டென மெத்தையில் இருந்து எழுவது..

*அவசரமாய் குளிப்பது

*அவசரமாய் கிளம்புவது

* அவசரமாய் பேசுவது எழுதுவது சிரிப்பது ...

* அவசரமாய் உண்பது ..

* அவசரமாய் ஆறுதல் விசாரிப்பது

*அவசரமாய் குழந்தையை கொஞ்சுவது .. ( மிகப்பெரும் கொடுமை ! )

* அவசரமாய் உறங்குவது ..

எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டே சூரியன் மறைகிறது. மௌனமாக. இயற்கை நடத்தும் பாடங்கள் மனிதனுக்கு புரிவதே இல்லை. அத்துணை மழையிலும் புயலிலும் காற்றிலும் இலை காம்புடன் மௌனமாகவே commit ஆகி நிற்கிறது. சத்தம், சண்டை, divorce, counseling, relationship எல்லாம் அதனிடம் இல்லை.

ஏன் .. அப்படி ஒரு மௌன புரிதல் வாழ்வை மனிதனால் வாழவே முடியாதா ?




#தீராஉலா2point0: 021;

ஒரு சிறு மலைப்பகுதி. City அங்கே செல்கிறது. தூரத்தில் நிற்கும் நாய்கள் கொஞ்சம் விழித்து ஒதுங்குகின்றன. காற்று தன் வெளியில் வந்த City யை மன்னித்து தடவி செல்கிறது. சட்டென யாருமற்ற நிலம் நம்மை கேள்வி கேட்கிறது.

" இப்போதுதான் நான் தெரிந்தேனா ? "

******************************

என்னிடம் பொதுவாக கேட்கப்படும் ஒரு கேள்வி ...

" எப்படி உங்களால் இப்படி இருக்க முடிகிறது ? "

என் பொதுவான பதில் ..

" ஏன் இப்படி இருக்க கூடாது ? "

நான் எதற்கும் எதிரானவன் இல்லை. ஆனால், முகமூடி இல்லாமல், முழுக்கவே வாழும் உண்மையான வாழ்க்கைக்கு, ஆதரவானவன். ஆதலால் நெஞ்சம் நேர் நின்று, கண் கண் பார்த்து, பேச முடியா

வாழ்க்கையை நான் விரும்புவதில்லை. கொஞ்சம் அப்படி இப்படி இருக்க வேண்டும் - என்று சொன்னால் நான் சிரிப்பதுண்டு. சரியாக சொல்ல வேண்டுமெனில் .. " இத்தனூண்டு வாழ்க்கையில் தான் எவ்வளவு வேடங்கள் ! ? ".

******************************

புகைப்படம் எடுக்கும் ஜெய் மீண்டும் கிடைப்பது இந்த பயணத்தின் நிறை நிகழ்வு எனக்கு. Silhouette படங்கள் நம்மை ஏதோ செய்யும். Identity தொலையும் படங்கள் அவை என்பதால் நம்மை எளிதாக அங்கே உருவகம் செய்ய முடியும். யாரோ குதிப்பது நம்மை குதிக்க செய்யும். ஏன் இவ்வளவு நாள் இப்படி செய்யவில்லை என்று கேட்கும். இந்த வகை படங்களை, சூரிய ஒளிக்கு எதிராக நிற்கும் எதனை வைத்தும் .. இந்த புகைப்படங்களை எடுக்க முடியும்.

Ragu G Rathinavelu Muthusubramanian இருவரும் உற்சாகம் ததும்பும் ஆளுமைகள். நல்ல travellers category யில் வருபவர்கள். தேவைகளை உடன் புரிந்து .. செய்ய வேண்டியதை செய்து ... உள் செழிப்பவர்கள். மனிதர்களை நிறைய வென்று இருக்கிறார்கள் இந்த முறை. நகரத்திற்குள்ளும் வெல்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

" ஒரு தீரா உலா பயணம் .. புரிதல் நிறை வாழ்க்கை " என்று ஒரு Tag line ஐயே எழுதலாம் என்னும் அளவிற்கு பயண புரிதலகள் இருவரிடமும்.

********************************

மரிப்பது எல்லோருக்கும் நிகழ்வது தான். ஆனால் மகிழ்வாய் மரிப்பது ? .. சிலருக்கு மட்டுமே கிடைக்கும். அப்படி எனில் .. எல்லோருக்கும் கிடைக்காதா ? என்ற ஒரு கேள்வி வரலாம். கிடைக்கும். கண்டிப்பாக கிடைக்கும். யாரெல்லாம் தன்னை தொலைத்து, மீண்டும் கண்டுபிடிக்கும் பயணம் செய்கிறார்களோ .. அவர்களுக்கு கிடைக்கும்.

என்ன .. அப்படி ஒரு பயணம் செய்ய தயாரா ?




#தீராஉலா2point0: 022

கடந்த வருடம் Feb March சமயம். Personal Challenges களால் சூழப்பட்ட மாதங்கள், நாட்கள், நிமிடங்கள். எதிர்பார்க்காத தருணங்களில் எங்கோ இருந்து வரும் வீச்சுகளை சமாளிக்க முடியும். அது பிரச்சினை இல்லை. எதிர்பார்க்கா மனிதர்களிடம் இருந்து ? அதையும் எதிர்கொள்ள வேண்டிய தருணம் ... ஆம். எதிர்கொண்டேன். நினைத்தே பார்க்க முடியாத எண்ண வீச்சுகளை மனிதர்கள் அள்ளி வீசியபோது .. கால் தரையில் இருந்தாலும், உடல் தடுமாறுமே .. அப்படி தடுமாறி நின்ற சமயம் அது. உடலால் நின்று மனதால் விழுந்து, பின் மனதாலேயே எழுந்த பொழுதுகள் அவை. சரி .. யார் அந்த மனிதர்கள் ? என்பது இருக்கட்டும். ஆனால் எப்படி எழுந்தேன் என்பது ஒரு pattern ஆக ( உங்களுக்கு உதவக்கூடும் என்பதால் ) பகிர்கிறேன்.

பொதுவாக கடுமையான தருணங்களில், நம் energy துவண்டு போகும். செய்வதறியாது தவிக்கும். என்ன செய்வது என்பதை விட, என்ன செய்யக்கூடாது என்பதில் தெளிவு இல்லாமல் எதை எதையோ செய்துவிடும். அப்படி எதை எதையோ செய்வது, இன்னும் பிரச்சினைகளை அதிகம் ஆக்கும். அல்லது புது பிரச்சினைகளை கொண்டுவரும்.

ஆதலால் .. கடுமையான தருணங்களில், நான் " புதியதாக " ஒன்றை, "இதுவரை செய்யாத ஆனால் என் திறமையை வளர்க்க கூடிய " ஒன்றை செய்ய ஆரம்பித்துவிடுவேன். அப்படி நான் ஆரம்பித்த ஒரு முயற்சிதான் SOW - Soul Of a Wanderer - என் முதல் ஆங்கில புத்தகம். May மாதம் 1 ஆம் தேதி ஆரம்பித்து, May 25 ஆம் நாளில் முடித்திருந்தேன் ! என்னது ? வெறும் 25 நாட்கள் மட்டுமா ? என்று கேட்க தோன்றுகிறதா ? ஆம்...25 நாட்கள் மட்டும். ஆனால் வேறு எதுவும் அற்ற, எழுத்து மட்டுமே எண்ணமாகிப்போன .. முழு 25 நாட்கள். 25 நாட்களும் எழுத்துதான். தூக்கம் தவிர மற்ற நேரங்கள் அனைத்தும் எழுத்து. எழுதி முடித்து, மே 28 - என் பிறந்த நாள்அன்று இமயமலையில் இருந்தது என்பது என் வாழ்வின் மறக்க முடியா நிகழ்வு. அதற்கு பின் சரியாக ஒரு மாத அளவில் புத்தகம் வந்த போது, நான் பெற்ற குழந்தையாய், அந்த முதல் புத்தகத்தை வருடியது இன்னும் ஞாபகத்தில் !

பிரச்சினைகள் வரும்போது துவளும் எண்ணங்களுக்கு தீனி - நடந்தவற்றை யோசித்து யோசித்து மீண்டும் அதிர்ந்து போவதல்ல. சொல்லி சொல்லி தளர்ந்து போவதல்ல. நினைத்து நினைத்து சோர்ந்து போவதல்ல. பிரச்சினைகளின் போது, எண்ணங்களின் தீனி .. இதுவரை செய்யாத அல்லது நீண்ட நாட்களாக செய்ய நினைத்த ஒன்றை கையில் எடுப்பது, அதை செய்து முடித்து நிற்பது .. ! அப்படி நிற்கும்போது எண்ணங்களுக்கு கிடைக்கும் புதுப்பார்வை தான் அதன் விருப்பத் தீனி. அங்கிருந்து அது பழைய பிரச்சினைகளுக்கும் முடிவை சொல்லிவிடும். இப்போதும் SOW பார்க்கும்போதெல்லாம் அந்த கடின பக்கங்கள் ஞாபகம் வரும். ஆனால் சிரித்த முகத்துடன் !!

Gujarat - Dordo வில் SOW வை வைத்து, புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தபோது ....எனக்கு மனதில் தோன்றியவற்றினை இங்கு பதிகிறேன்.

" 360 Degree க்கும் வெண்மையான இந்த உலகத்தில் ஒருவன் ஒருத்தி காணாமல் போனால் .. மீண்டெழுவது வாய்ப்பே இல்லாத ஒன்று. ஆனாலும் இவ்வுலகத்தில், ஒரே ஒரு reference மட்டும் கிடைத்தால் போதும். இந்த 360 degree யையும் கடக்க முடியும். Reference point இங்கே ஒரு Producer of Hope. Light House எப்படி கடலில் செயல்படுகிறதோ அப்படித்தான் இந்த Reference point ம் இங்கே 360 degree வெண்மையில் ! அதே போல ஒரு reference point தான் SOW என் வாழ்க்கையில். ஆனால் .. SOW என்பது நானே உருவாக்கியது. காணாமல் போன ஒருவன், தானே உருவாக்கிய ஒன்றினை கொண்டு எழுந்து வருவது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. அப்படித்தான் என் வாழ்வும் " !

இந்த நினைவுகளில் மூழ்கி இருந்ததில் நீண்ட நேரம் ஆகிப் போயிருந்தது. உப்பு மண்ணின் மேல் நீண்ட நேரம் அமர்ந்திருந்ததை ஈரமாகிப்போன உடை ஞாபகப்படுத்தியது. ஆம். உப்பின் ஈரம் தொட்ட உடை உடலை நம நம வென்று என்னவோ செய்தது. இனி இந்த உடையை அணிய வாய்ப்பில்லை என்று மனம் சொல்லியதை உடல் கேட்டுகொண்டது. என்னவோ செய்யத் தொடங்கிய உடையை கழட்டி விட்டு, நின்ற போது .. அடுத்த உடை என்னை அணிந்து கொண்டது.

அங்கே நான் கழட்டியது உடைகளை மட்டும் அல்ல. என்னவோ செய்த தேவை அற்ற எம் பழைய நினைவுகளையும்தான் ! அங்கே என்னை அணிந்த இன்னொரு ஆடை - வெறும் ஆடை - மட்டும் அல்ல. .. அது ஒரு புது Reference Point !






#தீராஉலா2point0:23;

சபர்மதி ஆசிரமத்தில் அந்த காட்சி என்னை ஒரு நிமிடம் நிறுத்தியது. வயதான பெரியவர், கையில் பழம் ஒன்றை வைத்துக்கொண்டு, அணிலுக்கு உணவாக கொடுத்துக்கொண்டிருந்தார். அது அல்ல என்னை நிறுத்திய காட்சி. அப்படி உணவு கொடுத்துக்கொண்டு இருந்த அந்த பெரியவரிடம் எந்த ஒரு அசைவும் இல்லா நிலையே என்னை நிறுத்தியது. என் அருகாமை அவரை துளியும் பாதிக்கவில்லை. திரும்பி பார்க்கவில்லை. சத்தம் போடாதீர்கள் என்று சொல்லவில்லை. கை வைத்து ஷ் ஷ் சொல்லவில்லை. ஆனாலும் அமைதியாய் உணவு கொடுத்துக்கொண்டு இருந்தார். ஈகையில் ஒரு தியான நிலை. கடைசி வரை அவர் முகம் தெரியவே இல்லை எனக்கு ! அணிலும் அவருக்கு இணையாக. எந்த பயமும் இல்லை. அவர் இருக்கும் தைரியமோ என்னவோ, நின்றது நின்ற படி. சாப்பிட்டு கொண்டு இருந்தது.



பொதுவாக மிருகங்கள் நம்மை நெருங்குவதில்லை. நம் எண்ண அலைவரிசை அவற்றினை நெருங்க விடுவதில்லை. நாய்க்குட்டி கூட நாம் கோபமாக இருக்கும்போது நம்மை திரும்பி பார்ப்பது இல்லை. நம் மனநிலை ஒரு தியான நிலை அலைவரிசைக்கு வரும்போது மட்டுமே அது நம்முடன் கொஞ்சி குழையும். கோபத்துடன் ஒரு நாய்க்குட்டி அருகே சென்று பார்த்தால் அது நம்மை விட்டு விலகுவதை உணர முடியும். நாம் மிருகங்களை select செய்வதில்லை. மிருகங்கள் தான் நம்மை select செய்கின்றன.

மிருகங்களின் sensitivity உணர்வு ஆச்சரியமானது. பறவைகள் அவற்றின் அருகில் நாம் செல்லும்போது பறக்கின்றன. நாம் நெருங்கியதும் பட்டாம்பூச்சி விலகுகிறது. நாம் திரும்பி பார்த்தால் பூனை ஓடுகிறது. நாம் முறைத்தால் குரங்கு முறைக்கிறது. பின் நம்மிடம் இருந்து விலகுகிறது. கல் எடுக்கும் நம்மிடம் இருந்து, நாய் அடிக்கும் முன்னே ஓடிவிடுகிறது. ஆக .. விலங்குகளால் ஒதுக்கப்பட்ட மனிதர்களாகவே வாழ்கிறோம். ஐந்து

அறிவு நம்மை கண்டு ஒதுங்குவதில் இருக்கிறது நம்மின் உபயோகம் அற்ற அறிவு !

இவ்வளவுக்கும் நடுவில், ஒரு அணில் .. மனிதனை கண்டு பயப்படாமல், அவன் கொடுப்பதை உண்கிறதே .. அங்கே இருக்கிறது மனித ஆச்சர்யம் ! இன்னும் கண்ணுக்குள் இருக்கிறது அந்த மனிதரின் அசையா நிலை. கண் விழித்த தியானம். AN Undisturbed Focus & Helping Frequency. வாழ்ந்தால் அப்படி ஒரு வாழ்வை வாழ வேண்டும் !!

*24 is Video

#தீராஉலா2point0: 025 ;

ஆற்றில் குளிக்க வேண்டும். அல்லது நல்ல நீர் ஓடும் வாய்க்காலிலாவது குதிக்க குளிக்க வேண்டும். ஆம். அப்படி ஒன்று கண்ணில் பட்டவுடன் ... மனம் இலயிக்க ஆரம்பித்தது. நாங்கள் செல்லும் முன்பு அங்கே மூன்று பேர் குதிக்க .. மனம் மகிழ்வில் குதிக்க ஆரம்பித்தது !

Ragu G மாறுகோ மாறுகோ மாறுகயீ .. கமல் voice இல் பாட, நீரின் குளிரில் குரல் ஆடாத ஆட்டம் ஆடியது. Rathinavelu Muthusubramanian ஒரு பழைய கல் ஒன்றை தேடி எடுத்து " இதைத்தான் தேடிட்டுருந்தேன் " என்று கால் பாதத்தை சுத்தம் செய்ய ஆரம்பிக்க, நான் நீருக்குள் இறங்கினேன். இறங்கிய பகுதி குளிரில் நடுங்க, இறங்காத பகுதியை வெய்யில்

அணைக்க .. இரு வெப்பநிலையில் ஒரு உடல் தூக்கி நீரில் குதித்து மூழ்கி எழுந்த போது .. இதையெல்லாம் நாகரிகம் பெயரில் இழந்தது ஞாபகத்தில் வந்தது !

துவைத்த துணி, சில நிமிடங்களில் காய்ந்து விட்டது. ஆற்று நீரில் தலை முடி shampoo இல்லாமலேயே பஞ்சு பஞ்சாக பறந்தது. குளித்து எழுந்தவுடன் ஒரு தனி ஆற்றல். அசதி காணாமல் போக Fresh ஆக வெளிவந்த போது .. மனம் கேட்டது .. " எந்த shower ம் இதற்கு இணையாகுமா ? "

தாத்தாவும் நானும் கம்மாயில் குளிக்க சென்றது இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. தாத்தா அவரின் துணிகளை அவரே துவைத்து, கொஞ்ச நேரம் சூரியனை கும்பிடுவார். பின் கொஞ்ச தூரம் நடந்து.. பொத் தென்று நடு கம்மாயில் விழுந்து என்னை கூப்பிடுவார். அதுவரை காத்திருக்கும் நான் ... ஓடிப்போய் விழுவேன். அவர் பிடித்து நீச்சல் கற்று தருவார். பின் நாட்களில் சித்தப்பாவுடன் குளித்து வெளியே வரும்போது .. கண்கள் சிவந்து, தோல் ஊறிப்போய், காலில் ஒட்டிய மண் உதறி விழ விழ வீடு வந்து காலை உணவை அப்பத்தா கையால் சாப்பிட்டது இன்னும் ஞாபகம் இருக்கிறது. என்ன அழகான நாட்கள் அவை !

வானம் பார்த்து, காற்று வாங்கி, வெயில் பட்டு, நீரில் மூழ்கி, நிலம் தொட்டு, தண்ணீரை வெட்டிக்கொண்டு நீரில் இருந்து எழுந்து வெளியே வருவதெல்லாம் வரம். 5 க்கு 8 - அளவில், குளியலறையில், எந்த connect ம் இல்லாமல் குளிப்பது எங்கே இருந்து வந்தது ? முதலில் ஆறுகளை இழந்து, வளங்களை இழந்து, குளிப்பதை, குதிப்பதை, மூழ்கி எழுவதை எல்லாம் இழந்து ... shower க்கு கீழ் குற்றவாளியை போல நிற்கிறோம் - ஆம் - தலையை குனிந்து கொண்டு !!

நாம் உடனே செய்ய வேண்டிய ஒன்று இருக்கிறது. அடுத்த தலைமுறையை ஆறுகள், ஏரிகள் நோக்கி கொண்டு செல்வது. சுத்தமான ஆறுகள் ஏரிகள் இன்னும் இருக்கின்றன. நாம் தான் அவற்றை மறந்துவிட்டோம்.

என்ன .. மீண்டும் ஆறுகள் ஏரிகளை நோக்கி செல்வோமா ?




#தீராஉலா2பாயிண்ட்0: 26 ;

எல்லைகளில் நிற்கும்போது உள்ளே ஏதோ ஒன்று தோன்றுகிறதே .. என்ன அது என்று கவனித்தது உண்டா ? ஏதோ ஒரு இனம் புரியா, வகைப்படுத்த முடியா, பெயர் வைக்க முடியா உணர்வு அது. இதற்கு மேல் நீ வரக்கூடாது, செல்ல முடியாது - இந்த ஒரு வரி - ஒரு தனி மனித சுதந்திரத்தை அப்படியே stillness இல் வைத்துவிடுகின்றன. இதற்கு மேல் செல்ல முடியாது என்னும்போது .. அந்த பக்கம் நம்மை போலவே யாரோ ஒருவர் நின்று பார்ப்பது போல ஒரு வெறுமை உணர்வு. நாடுகள் என்று வந்த பின், முதலில் அதற்கு பலியானது தனி மனித சுதந்திரம் மட்டுமே ! நாடுகள் என்ற concept மனித மனங்களின் குறு உணர்வின் வெளிப்பாடே !

வாகா எல்லையில் பாகிஸ்தான் மனிதர்களை கண்டிருக்கிறேன். சிரித்தால் சிரிக்காமல் சென்ற அவர்களை பார்க்கும்போது நாடு என்கிற concept மேல் கோபம் வந்தது. சிரித்தால் பதிலுக்கு சிரிக்க கூடாது என்பது தான் நாடுகள் ஏற்படுத்தும் நல் எண்ண உறவா ? இராமேஷ்வர மீனவர்களை சிங்கள இராணுவம் படுத்திய பாட்டினை அவர்கள் வாயாலேயே கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு எல்லை வரைந்த அழகற்ற ஓவியக்கிறுக்கல்கள்.

Hanle வில் இந்திய சீனா எல்லையில் இப்படி tension எல்லாம் பார்க்காமல் சுதந்திரமாக வலம் வந்தது கொஞ்சம் ஆறுதல். அதேபோல Dolavira வில், எல்லை பாதுகாப்பு படையினருடன் பக்கத்தில் அமர்ந்து பேசும்போது .. அவ்வளவு **இனிமையாக** இருந்தது. இங்கே யாரும் வர முடியாது என்பதால் tension இல்லை... என்று படை வீரர் சொன்னபோது .. tension ஐ ஏற்படுத்துபவை எல்லைகள் அல்ல .. மனித மனங்கள் என்று புரிந்தது !

நாட்டின் எல்லைகளே பின் மாநில, மாவட்ட, வீட்டு, அறை மற்றும் தனி மனித எல்லைகளாக மாறிபோகின்றன. எல்லை என்பதே நம்பிக்கையின்மைக்கு கிடைத்த systematic வெற்றி. நம்பிக்கைக்கு கிடைக்கும் consistent தோல்வி.

" உன்னை நம்புகிறேன். இங்கே வந்து செல்லும் அனைத்து உரிமையையும் உனக்கு தருகிறேன் " என்று அனைத்து நாடுகளும் சொன்னால் ... நாடுகள் அற்ற உலகம் ஒன்றை இனம் காண முடியும். அப்படி ஒன்று உண்டு எனில், அங்கே எங்கும் தொலையாமல் நம்மை நாம் கண்டறிய முடியும் !



#தீராஉலா2point0:27 ;

ஏன் இந்த குதித்தல் @தீரா உலாவில் முக்கிய நிகழ்வாக மாறுகிறது ? பொதுவாக குதிக்காதே என்று தானே சொல்வார்கள். ஆனால் இங்கு ஏன் " குதித்தல் " ஒரு நிகழ்வாகிறது ?

தரையில் இருந்து, புவி ஈர்ப்பு விசைக்கு எதிராக, மூச்சை கொஞ்சம் பிடித்து, ஒரு பிரயத்தனம் செய்தால், உடல் மேல் நோக்கி எழும்பும். ஒரு micro நொடி தரைக்கும், வானுக்கும் இடையில், ஒரு மனித பறவையை போல, பறந்து, தரை இறங்கும் நிகழ்வு தான் அது. இந்த நிகழ்வில் உடல் திரும்ப புவி நோக்கி வரும் என்பது தெரிந்ததே ! ஆனாலும் இதை செய்வதில் என்ன இருக்கிறது ?

இந்த வாழ்வில், தரையில், புவி ஈர்ப்பு விசையின் control இல், ஒரு எல்லைக்குள் வாழும் அடிமையாய் வாழ்ந்து மடிகிறோம். அந்த அடிமை தனத்தில் இருந்து micro நொடி எழுந்து வருவதே இந்த " குதித்தல் " நிகழ்வு.

நம் தினசரி வாழ்வின் கடமைகளில் இருந்து பிரிய முடியா மனிதனாக வாழ்ந்து முடிவது உண்மையே. இதோ நாளை முதல் என் Pro வேலைகள் ஆரம்பம். இங்கே இருந்த ஜெய் அடுத்து கிடைக்கப்போகும்

வாய்ப்பிற்காக கண் விழித்து எனக்குள் உறங்காமல் வாழ்ந்து கொண்டு இருப்பான். ஆக ஒரு பயணம் என்பது, நம் தினசரி கடமைகளில் இருந்து, ஒரு micro நொடி விலகி, விடுதலை பெற்று, நமக்கென வாழ்ந்து மீண்டும் கடமைகளை அடைதல். எப்படி ஒரு Micro நொடி நமக்கென பறந்து மீண்டும் தரையை அடைகிறோமோ அப்படி ! இப்போது புரிகிறதா ஏன் " குதித்தல் " என்று ?

" ஒரு பறவை பறந்த பின், தான் அங்கே இருந்ததற்கான தடயங்களை விட்டு செல்வதில்லை. பறந்த பின்னும், பறக்கும் முன்பும் அதே வான். அதே காற்று. " - அதே போல நம் பயணம் முடிந்து மீண்டும் கடமைகளை நோக்கி வரும்போது, அதே நாம் தான். எந்த மாற்றமும் நம்மிடம் இல்லை. ஆனால் ..அந்த பயணம்... தேவையற்ற ஏதோ க்களை நம்மிலிருந்து விலக்கி, தேவையான ஏதோக்களை நம்முடன் சேர்ந்து ... நம்மை மீண்டும் அப்படியே நம் இடத்தில் கொண்டு வந்து சேர்த்து விடும். வெளிக்கூடு அது. ஆனால் உள் நிர்ணய குறியீடுகள் வேறு !

அடுத்த பயணம் ஒன்றில் குதித்தல் நிகழ்வு உங்களுடனும் நடக்கட்டும். புகைப்படம் உங்களுக்கு நினைவு. மற்றவர்களுக்கு inspiration ! அதே சமயம் குதிக்கும் முன் கொஞ்சம் ஜாக்கிரதையாக மண்ணை check செய்து கொள்வது, அல்லது .. மெத்தை போன்ற விரிப்புகளை வைத்துக்கொள்வது சாலச் சிறந்தது.

ஒரே வரியில் சொன்னால் ...

" குதித்தாரை குதித்தாரே காமுறுவர் " என்று அவர்களுக்கு மட்டுமே புரியும் அந்த உள் எழும்பலின், வெளிப்பறத்தளின் .. micro நொடி சுகம் !

என்ன தயாரா ?




#தீராஉலா2point0: 28;

15 இல் இருந்து 18 அடி உயரம் இருக்கலாம். அகலம் 3 அடி இருக்கலாம். அவ்வளவு அழகான மர வேலைப்பாடு. குறைந்த பட்சம் 1000 வருடங்களாவது இதன் வயது இருக்கலாம். குஜராத் நாராயண் சரோவரில், விஷ்ணு கோவிலின் வாசல் கதவாக நிற்கிறது. Joint கள் எல்லாம் எந்த விரிசலும் இல்லாமல், செய்தது எப்படியோ அப்படியே நிற்கிறது. ஆம். ஒரு திறமையின் மௌன சாட்சியாய் அது நிற்பதை காணும்போது மனதிற்குள் சில கேள்விகள் எழுகின்றன.

1. இதை செய்த திறமைகளின் வாரிசுகள் இப்போது எங்கே இருக்கிறார்கள் ? அந்த வாரிசுகளின் திறமைகள் இப்போது என்னவாக இருக்கின்றன ?

2. திறமை தானே கடவுளாக மாறி இருக்க வேண்டும் ? இந்த கதவே என்னை பொறுத்தவரை கடவுள் தான்.

3. ஒரு அரசாங்கம் திறமைக்கான forum ஒன்றை உருவாக்கி, இப்படி திறமைகளை அந்த forum மின் உறுப்பினர்களாக மாற்றி, அந்த forum மை alive ஆக வைத்திருந்தால் ... எவ்வளவு பெரிய திறமைக்குவிப்பு நம்மிடம் இருந்திருக்க முடியும் இப்போது ?

4. இந்தியா முழுக்க கோவில்களை விட, கோவில்களின் வேலைப்பாடுகளை செய்தவர்கள் அல்லவா முன்னிலைப்படுத்தி முதல் மரியாதைகளை பெற்றிருக்க வேண்டும் ?

5. Computer Calculator இல்லா காலத்து இந்த திறமைகள் இப்போது இருந்தால் இன்னும் அல்லவா மேம்பட்டு இருக்க முடியும் ?

கேள்விகள் எப்போதும் சுவாரஸ்யமானவை. பதில்களை யாரிடம் பெறுவது என்று தெரியாததால், எறியப்பட்ட விதத்தில் அப்படியே வானில் நின்று கொண்டிருக்கும் கேள்விகளுக்கு ... காலம் மட்டுமே பதிலை சொல்லாமல் வைத்திருக்கிறது. கால மௌனம் போல கொடுமை ஒன்றும் இல்லை.

இதை செய்தவனின் செய்தவளின் ஏதோ ஒரு வாரிசு இன்றோ நேற்றோ நாளையோ இந்த கதவை கடக்க கூடும் - தன் முப்பாட்டன் செய்தது இது என்று தெரியாமலே ! புகைப்படம் எடுத்து வீட்டில் மாட்டி வைக்க கூடும் - தன் DNA வில் அதற்கான கரு இருப்பது தெரியாமலேயே !

இவ்வுலகின் மிகப்பெரும் கொடுமை - அறியப்படா திறமை - மட்டுமே !

யோசிப்போம் ..




#தீராஉலா2point0:29;

கட்ச் என்பது வெறும் மண் மட்டும் அல்ல. வெறும் மனிதர்களை மட்டும் கொண்டது அல்ல. வெறும் கால்நடைகளை மட்டும் பற்றியது அல்ல. அது ஒரு வாழ்வியல். அதிலும் பெண்களின் வாழ்வியல் அங்கே மிக பலமாக நிகழ்கிறது.

1971 இந்தியா பாகிஸ்தான் போர். இந்திய விமான ஓடுகளம் பூஜ் பகுதியில் பாக் குண்டுகளால் பாதிக்கப்படுகிறது. இந்திய இராணுவத்தால் உடனடியாக ஓடுகளத்தை செப்பனிட்டு பயன்படுத்த முடியவில்லை. இந்திய இராணுவம் பூஜ் மாவட்ட ஆட்சியரை நாடுகிறது. "அதைப்பற்றி கவலை வேண்டாம் " என்று இராணுவத்திடம் சொல்லிவிட்டு, கட்ச் கிராம மக்களிடம் செல்கிறார். 90 கட்ச் பெண்கள் இந்திய இராணுவத்திற்கு உதவி செய்ய வருகின்றனர். ஓடுகளத்தை சில மணி நேரங்களில் சரி செய்கின்றனர். இந்திய இராணுவம் மீண்டும் விமானங்களை அங்கே உபயோகிக்க ஆரம்பிக்கிறது. போருக்கு பின் அதே இந்திய இராணுவம் அனைத்து பெண்களையும் அழைத்து " வீராங்கனைகள் " என்று சொல்லி சிறப்பிக்கிறது. பொருளாதார உதவியையும் கொஞ்சம் கொடுத்து அவர்களின் திறமை அடுத்த நிலைக்கு வர உதவி செய்கிறது. " அடுத்து


எதுவும் பிரச்சின்னன்னா கூப்பிடுங்கள் " என்று சொல்லிவிட்டு, மிடுக்காக நடப்பதை, salute அடித்து இந்திய ராணுவம் பார்த்தது.

ஒரு கட்ச் பெண் .. கிட்டத்தட்ட 10 ஆண்களுக்கு சமம் என்று சொல்ல கேட்டிருக்கிறேன். ஆண் பெண் சரிவிகித பார்வையில் இதை நான் ஆமோதிக்கவில்லை எனினும், நிகழ் சூழ்நிலைப்படி, 10 ஆண்களுக்கு சமம் என்பது அவளின் வலிமையை காட்டுவது. கருப்பு உடை அணிந்து, காது, மூக்கு, கைகளில் தோள்பட்டையில் ஆரம்பித்து கணுக்கை வரை அவர்கள் அணியும் ஆபரணங்களில் .. ஒரு கம்பீரம் இருக்கும். பெரும்பாலும் இடது காலில் அவர்கள் இடும் வெள்ளி வளையம், இன்னொரு மிடுக்கான தோற்றத்தை அவர்களுக்கு கொடுப்பதும் உண்மை.முகம் மறைத்த துணி வழியாக நேராக கண் பார்க்கும் கட்ச் பெண்ணை பார்த்தால் நமக்கு ஒரு முழு மரியாதை வருவது உண்மை.

பொதுவாக கைவினை பொருட்கள் தயாரிப்பில் கட்ச் பெண்கள் சிறந்து நிற்பது அநேகமாக இந்த தையிரிய நிகழ்வுக்கு காரணமாக இருக்க கூடும். எங்கெல்லாம் பெண் தன் கைவினைத்திறன் நம்பி இருக்கிறாளோ அங்கு அவளுக்கு தையிரியம் அனாயசமாக வரும். ( ஊர் இதை திமிர் என்று பேசும் என்பது வேறு விடயம் ! ). அவர்களின் திறமையை அடுத்த நிலை நோக்கி கொண்டு செல்லும் அனைத்து நடவடிக்கையையும் குஜராத் அரசு செய்கிறது. ( இந்தியா முழுக்க இருக்கும் பெண்களுக்கு இந்த 5 வருடத்தில் எவ்வளவோ செய்திருக்க முடியும் !! )

ஒரு கட்ச் பெண்ணை புகைப்படம் எடுத்தபோது, ( என்னை கண்ணில் பார்த்து, 'சரி எடுக்கலாம் ' என்று சொன்னவுடன் ... ) அந்த புகைப்படத்தை எடுத்த பின் மீண்டும் பார்த்து, " ஹ்ம்ம் tik hei " என்று சிரித்த கம்பீரத்தை நான் ரசித்து நின்றி ருக்கிறேன். இதே நிகழ்வு, இமாலய பக்க பெண்களிடமும் கவனித்து இருக்கிறேன். பெரும்பாலும் கட்ச் பெண்கள் குடும்பத்தை முன்னின்று நிர்வாகம் செய்கின்றனர். ஒரு கட்ச் பெண்ணின் நடை போதும் .. பார்வை போதும் .. அவளின் கம்பீரத்தை புரிந்துகொள்ள.

ஒருமுறை கட்ச் செல்வோம். அந்த பெண்களிடம் படிக்க வேண்டியது நிறைய இருக்கிறது.




#தீராஉலா2point0: 030 ; ( The Final One )

சென்னை - மும்பை - அகமதாபாத் - Little Rann of Kutch - Dolavira - Dordo - Lakhpat - Dwaraka - Bet Dwaraka - Somnath - Saputara - Nashik - Pune - Chennai - 11 days - 6128 Kms - மூன்று பேர்.

முடிந்த அளவு பயணத்தில் அவ்வப்போது நடந்த நிகழ்வுகளை உங்களுக்கு கொடுக்க முடிந்தது என்ற மகிழ்வுடன்.

பயணங்களில் சில முக்கிய நிகழ்வுகள் :

1. Little Rann of Kutch ஐ குறுக்காக ஒரே car இல் கடந்தது. ( அநேகமாக தமிழ்நாட்டில் வெகு சிலரே இதை கடந்து இருக்க கூடும். இன்னும் சரியாக சொன்னால் முதல் நபராகவும் இருக்கலாம் ! )

2. Dolavira செல்லும் வழியில் Kathirbet இல் 360 degree வெண்மையில் தீரா உலா வின் trademark ஆக "குதித்து" மகிழ்ந்தது.

3. Lakhpat fort இல் எல்லையை சுவாசித்தது.

4. Dwaraka செல்லும் வழியில், ஒரு கட்டை சுவருக்கு அருகில் மனம் நிறைந்த Photoshoot ஒன்றை செய்தது.

5. Bet Dwaraka வில் பறவைகளுடன் விளையாடியது.

6. Saputara வின் காலை பொழுது

7. சென்னை அகமதாபாத் /அகமதாபாத் சென்னை - இரு வழியிலும் - 30 மணி நேர drive இல் அடைந்தது.

8. இரு பொறுப்பான driver களின் / drive மற்றும் அவர்களின் மகிழ்வை ரசித்தது.

9. ஒரு நாளுக்கு ஒரு முறை மட்டுமே உண்டு மற்ற நேரங்களில் அந்தந்த பகுதியின் special மேந்தீனிகளை ஒரு வாய் பார்த்தது.

10. எல்லாவற்றிக்கும் மேல் நர்மதா நதியின் bridge இல் 10K slogging செய்தது.

... இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

என்னுடன் தீரா உலா வின் official drives இல் பயணிக்க விரும்புபவர்கள் கீழ் கண்டவற்றினை கவனமாக படிக்கவும்.

1. எவ்வித தீய பழக்கங்களுக்கும் இடம் இல்லை.

2. பெண்களுக்கான space மரியாதையுடன் கொடுக்கப்படவேண்டும்.

3. எப்போது கிளம்புகிறோம், எப்போது வந்தடைவோம் என்ற கேள்விகளுக்கு என் சிரிப்பே பதில்.

4. Inconvenience இல் பொறுப்பை ஏற்கும் ஆளுமைகள் வரலாம். Complaint செய்யும் ஆளுமைகள் விலகலாம் - வர வேண்டியதில்லை

5. இங்கே போகலாம் அங்கே போகலாம் என்கிற suggestions fine. ஆனால்

போகவில்லை எனில் வருத்தம் வேண்டியதில்லை.

6. முதலிலேயே ஒரு தொகையை கொடுத்து, செலவுகளை share செய்து கொள்ளலாம்.

7. Registration Fee என்ற ஒன்றை பெறும்போது, அதற்கு surprise gifts வந்து சேரும். ( நான் சம்பாதிப்பது எனக்கு போதுமானது. பயணங்களில் இருந்து ஒரு பைசாவும் தேவை இல்லை. மீதம் இருந்தால், நன் செயல்களுக்கு செலுத்தப்படும்.) Registration fee என்பது ஒரு commitment குக்காக பெறப்படும் தொகை. அநேகமாக அது மிக minimum ஆக இருக்க கூடும்.

8. ஒரு நாளைக்கு தோராயமாக 1250 முதல் 1500 அளவிற்கு உங்களுக்கு செலவு ஆகலாம். தங்கும் இட சௌகர்ய அசௌகர்யங்களை ஒரே மாதிரி கவனித்தல் பயணிக்கு அழகு.

9. SHaring basis இல் தங்கும்போது .. நட்பே பிரதானமாக இருக்கட்டும்.

10. வாகனங்களின் திடீர் செலவுகளுக்கு மனிதாபிமான அடிப்படையில், பொறுப்பேற்க்கலாம்.

11. ACcident போன்ற திடீர் எதிர்பாராதவைகளுக்கு .. அவரவரே பொறுப்பு.

12. பயணம் என்று முடிவெடுக்கும்போது, அதை நீங்கள் எடுத்தீர்கள் என்பதே சரி. நன்றாக இருந்தால் நான் செல்வேன் என்பதும், தடுமாறினால் இவர் கூப்பிட்டார் அவர் கூப்பிட்டார் என்பதும் .. இங்கு அனுமதிக்கப்படுவது இல்லை.

13. பயணிப்பவர்கள் அனுபவம் பயணக்கட்டுரைகளாக share செய்யப்பட, அது இன்னும் பலரை பயணிக்க வைக்கும்.

14. மொத்த பயணமும், நட்பின் புரிதலாக ...அமைய வேண்டும்.

*Thank you*